விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 07 வெள்ளிக்கிழமை (19.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 62

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

# சரத் பொன்சேகா தலைமையில் ஜனநாயக தேசியக் கூட்டணி போட்டி

## கட்சியின் சின்னம் கிண்ணம்

(கொழும்பு)

ஜே.வி.பி.என்ற மக்கள் விடுதலை முன்னணி ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணி என்ற புதிய கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இந்த கூட்டமைப்பில் கிண்ணம் சின்னத்தில் ஜே.வி.பி. எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த கூட்டமைப்புக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க மற்றும் சுதந்திர கட்சியின் மக்கள் பிரிவு பொதுசெயலாளர் டிரான் அலஸ் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு தனி மாநிலம் அமைய இந்தியா வலியுறுத்த வேண்டும்!

### இரா.அன்பரசு வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு தனிமாநிலம் அமைத்திட இந்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டுமென்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.அன்பரசு கேட்டுக் கொண்டுள்ளார். சென்னை வந்த மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.அன்பரசு நேரில் சந்தித்த போது மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து கூறியதாவது, இலங்கைத் தமிழர்கள் எல்லா (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் அழுத்தத்தினாலேயே பௌத்த பீட மாநாடு இரத்தானது

### பீடாதிபதிகளின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் விவாதிப்பதற்காக தாம் அழைப்பு விடுவித்திருந்த விசேட கூட்டத்தை அரசாங்கம் தந்த அழுத்தம் காரணமாகவே தாங்கள் ஒத்திப் போட்டுள்ளதாக இலங்கை பௌத்த பீடாதிபதிகள் சார்பாகப் பேசவல்லவர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்திற்கு ஆதரவாகவுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளும் ஆதரவாகவுள்ள புத்த பிக்குகளும் மல்வத்தை தலைமை பீடாதி பதி திரிபத்துவாவே சிறி (16ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவைக்கு புதிய பேச்சாளர்கள்

(கொழும்பு)

அமைச்சரவை பேச்சாளர்களாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ.எஸ்.பீ. சலுகை நிறுத்தத்தால் இலங்கை அரசுக்கு பாதிப்பில்லை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய யூனியன் வழங்கும் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்படுவதனால் பாதிப்புக்கள் ஏற்படும் என எவரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்கும் என்று ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஆடை உற்பத்தித்துறைக்கு ஐரோப்பிய யூனியன் வழங்கும் (16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் அரசியல் வியாபாரிகளை வேட்பாளர்களாக நிறுத்தவேண்டாம்

### ரணிலுக்கு மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் துன்புறும் போது அவர்களுக்கு ஒரு போதும் துணையிராத சில தமிழ் அரசியல் வியாபாரிகளை ஐக்கிய தேசியக் கட்சியின் நேரடி தமிழ் வேட்பாளர்கள் என்ற போர்வையில் எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது கொழும்பு மாவட்டத்திலே நிறுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவிடம் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் களத்தில் முத்தையா முரளிதரன்?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கண்டி மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் உப தலைவராக போட்டியிட உள்ளார்.

முத்தையா முரளிதரனை வேட்பாளர் பட்டியலில் சேர்க்கும் திட்டத்தின் பின்னணியில் எஸ்.பி.திஸநாயக்கவே இருந்துள்ளார்.

டெஸ்ட் மற்றும் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட புத்திஜீவிகள் உட்பட பலர் விண்ணப்பம்

### கொழும்பிலும் போட்டியிடத் திட்டம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்காக வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் புத்திஜீவிகள் உட்பட பல தரப்பினர் விண்ணப்பித்துள்ளதாக அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

இதில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் தெரிவு முடிபுற்ற நிலையில் வன்னி, யாழ். மாவட்டத்தில் களமிறக்கும் வேட்பாளர்களின் தெரிவு நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்காக வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து புத்திஜீவிகள் உட்பட (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் அலுவலகத்தை புதுடில்லியில் திறப்பதற்கு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய கூட்டமைப்பு புதுடில்லியில் கட்சி அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் கொழும்பிலும் புதுடில்லியிலும் கட்சியின் அலுவலகத்தை திறப்பதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அதற்கான ஏற்பாடுகளை தமது கட்சி மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார். இதே வேளை புதுடில்லியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தை திறப்பதறகு இந்திய அரசியல் கட்சிகளும் சம்பந்தம் தெரி வித்துள்ளதாக (16ஆம் பக்கம் பார்க்க)

## சுயலாப அரசியல் தலைமைகள் எவ்வாறு ஆணைகேட்டு வருவார்கள்

### ஈ.பி.டி.பி. அறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் உரிமை பிரச்சினைகளைத் தமது சுயலாபங்களுக்காக மட்டும் அடிக்கடி உச்சரித்துக் கொண்டு தமிழ் மக்களினதும், இளைஞர் யுவதிகளினதும் இரத்தத்தை சூடேற்றி அவர்களது வாக்குகளை மட்டும் அபகரித்துக் கொண்டு எமது மக்களின் மீது அழிவுகளை சுமத்தி, அவர்களை அவலங்களுக்குள் சிறைப்படுத்திவிட்டு நாட்டை விட்டே ஓடிப்போய் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவரும் சுயலாப அரசியல் தலைமைகள் எந்த முகத்தோடு இனியும் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மரதன் ஓட்டப்போட்டி

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலய நூற்றாண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டி நாளை சனிக் கிழமை காலை 6.30மணிக்கு நடை பெறவுள்ளது.

இவ் மரதன் ஓட்டப்போட்டியில் புங்குடுதீவு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். (ச)

## யாழ்.போதனா வைத்தியசாலையை புனரமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை புனரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

ஜப்பான் அரசாங்கம் இத்திட்டத்துக்கு 2ஆயிரத்து 298மில்லியன் யென் நிதியை உதவியாக வழங்குகிறது.

சத்திரசிகிச்சைக் கூடத்திற்கான புதிய கட்டடம் மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு நரம்பியல் மற்றும் இருதய சிகிச்சைப் பிரிவு உட்பட பல பிரிவுகள் இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன. (ச-5)

## தமிழக செம்மொழி மாநாட்டில் 91இலங்கையர்கள் பங்கேற்பர்

(சென்னை)

தமிழகத்தில் நடைபெறவுள்ள தமிழ் மாநாட்டில், தமிழாராய்ச்சிக்காக 49நாடுகளில் இருந்து 7ஆயிரத்து 256பேர் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள இந்த செம்மொழி மாநாட்டில் இலங்கையில் இருந்து 91பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் அவர்களில் ஆயிரத்து 500பேர் தமது ஆராய்வுகளை மாநாட்டின் போது சமர்ப்பிப்பர் என கூறப்படுகிறது.

தமிழக முதல்வர் மு.கருணாநிதி சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது இதனை தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து 91பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கனடாவில் இருந்து 23பேர், அமெரிக்காவில் இருந்து 44 பேர், அவுஸ்திரேலியாவில் இருந்து 15பேரும், இங்கிலாந்தில் இருந்து 18 பேரும், சீனாவில் இருந்து 4பேரும் கலந்து கொள்கின்றனர்.

இதற்கிடையில் தமிழ் இணைய மாநாட்டுக்காக 75தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆக்கங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகள் கலந்து கொள்ளவுள்ளதாக கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்த மாநாடு நடைபெறவுள்ள கோயம்புத்தூர் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி மற்றும் ஏற்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (ச)

## தொடர்பு கொள்க



சின்னமடு-புளியங்கூடலைச் சேர்ந்த மாணிக்கம் புஸ்பராசா, விநோததாஸ், ஜெசிந்தா, தேவகிபா என்பவர்களை அவரது உறவினரான நாதன் என்பவர் தேடுகின்றார். கடைசியாக இவர்கள் புதுமாத்தளன் பகுதியில் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி காணப்பட்டார்கள் என தகவல் தெரிவிக்கின்றன.

இவர்களைப் பற்றி விபரங்கள் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல: 077 3442566 (இ)


**லாலா சலவைப் பவுடர்**

யாழ். குடாநாட்டில் முதல் முதலாக மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது.

எமது அன்பான மாணவச் செல்வங்களே, உள்ளூர் உற்பத்திக்கு முன்னுரிமை கொடுக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

*லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி.* (சி-4468)


## பேசும் படம்



அயலவர்கள் என்ன செய்வர்...?


ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way French Classes**

சர்வதேச மொழியான **French** மொழி யாழ்ப்பாணத்தில் French Emabassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம். (433)



# மக்கள் வங்கி

## யாழ்ப்பாணக் கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

எமது வாடிக்கையாளர்களுக்கு தரமுயர்ந்த சேவையினை வழங்குவதற்காக எமது யாழ்ப்பாண கிளைகள் கீழ் குறிப்பிட்டிருக்கும் திகதிகளில் மக்கள் வங்கியின் கணனித் தொழில்நுட்ப சேவை, ஒருங்கிணைக்கப்பட்ட சேவையாக தரமுயர்த்தப்படவுள்ளது.

இதன் காரணமாக இக் குறிப்பிட்ட கிளைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வங்கிச் சேவை இடம்பெறுவதுடன் வழமையான வங்கி நடவடிக்கைகள் இடம்பெறமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

எனவே குறிப்பிட்ட தினங்களில் இக் கிளைகளில் தன்னியக்க இயந்திரத்தில் (ATM) பணத்தை மீளப் பெறும் தினங்கள் பற்றிய விபரமும், வங்கி நடவடிக்கைகள் இடம்பெறும் நேர விபரமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் | கீழ்காணும் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் இடம்பெறாத திகதியும் நேரமும் (பி.ப.12.00 முதல்) | ATM செயற்படும் நேரம் (மு.ப.9.00 முதல்) | கிளைகள் புதிய திட்டத்துடன் இணையும் திகதி (நள்ளிரவு 12.00 முதல்) |
|---|---|---|---|
| யாழ். ஸ்டான்லி வீதி | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| நாவலர் வீதி | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| மானிப்பாய் | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| யாழ்.பல்கலைக்கழகம் | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| திருநெல்வேலி | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| கல்வியங்காடு | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| சுன்னாகம் | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| கோப்பாய் | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |

| கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் | கீழ்காணும் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் இடம்பெறாத திகதியும் நேரமும் (பி.ப.12.00 முதல்) | ATM செயற்படும் நேரம் (மு.ப.9.00 முதல்) | கிளைகள் புதிய திட்டத்துடன் இணையும் திகதி (நள்ளிரவு 12.00 முதல்) |
|---|---|---|---|
| நெல்லியடி | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| பருத்தித்துறை | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| புலோலி | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| யாழ்.கன்னாதிட்டி | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| இணுவில் | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| யாழ். பிரதான வீதி | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| உரும்பிராய் | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| அச்சுவேலி | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |

**எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு மேற்குறித்த தினங்களில் ஏற்படும் சிரமங்களுக்கு வருத்தத்தைத் தெரிவிப்பதுடன் தாங்கள் எமக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கிறோம்.**

* நாடு பூராவுமுள்ள 231 வங்கிக் கிளைகளிலும், 257சேவை நிலையங்களிலும் மக்கள் வங்கியின் தரமுயர்த்தப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட பின்வரும் சேவைகளை வாடிக்கையாளர்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
* காசோலைத் தீர்ப்பனவு
* காசோலைப் பணப்பரிமாற்றம்
* நிலையான கட்டளைகளுக்கான கொடுப்பனவு, பெறுவனவு
* சேமிப்பு ,நிலையான வைப்புகளுக்குரிய துரித பணப்பரிமாற்றம்.
* SMS ஊடான வங்கிச் சேவை
* SLIPS பரிமாற்றம்
* 24மணி நேரத்திற்குள் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்கள்
* NRFC,RFC கணக்குகளுக்கான கொடுக்கல், வாங்கல்கள்
* விரைவான வெளிநாட்டு நாணய மாற்றல் சேவை
* வெளிநாட்டு காசோலை,பயணிகள் காசோலைகள் துரித வழங்கல் உடனடித் தீர்ப்பனவு

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

(சி-4470)

# இன்று ஒரு தகவல்

## மகிழ்ச்சியும் உல்லாசமும்

"அவருக்கு என்னசேர்? ஏழெட்டு கார் இருக்கு... நாலைஞ்சு பங்களா இருக்கு... ஆனந்தமாக இருக்கிறார்." என்று சிலபேரைப் பார்த்து நமக்கு சொல்லத் தோன்றும்.

அவர்களையே கொஞ்சம் நெருங்கி ஆராய்ந்து பார்த்தால் நம்மை விட அவர்கள் அதிகமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

பல சினிமா நட்சத்திரங்களையும் பிரமுகர்களையும் பார்க்கும் போது நாம் அப்படித்தான் நினைக்கிறோம்.

ஆடம்பரமான கார்... அழகான பங்களா, அவ்வப்போது விருந்து, பார்ட்டி என்று பார்க்கும் போது நமக்கு அப்படித்தான் தோன்றுகிறது.

அவர்களுடைய இன்னொரு பக்கத்தை ஆராய்ந்து பார்த்தால்... மனத்தளர்ச்சி... போதைப்பழக்கம்– மதுப்பழக்கம் இல்வாழ்க்கையில் சிக்கல்கள்– குடும்பத்தில் கோளாறுகள்– தனிமை இப்படி ஏகப்பட்டது இருக்கும்.

ஆடம்பரமாகவும் உல்லாசமாகவும் இருக்கும் ஒருத்தரைப் பார்த்து அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக நாம் நினைத்து விடுகிறோம்.

விடயம் தெரிந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"Fun" என்பது வேறு. "Happiness" என்பது வேறு என்கிறார்கள்.

அதாவது ஆடம்பரம் என்பது வேறு. உல்லாசம் என்பது வேறு.

ஒன்று நடக்கும் பொழுதே அனுபவிக்கிறது உல்லாசம். அது நடந்த பிறகு அனுபவிக்கிறது ஆனந்தம்.

ஆனந்தம் என்பது ஆழமான உணர்வு! உள்ளார்ந்த உணர்வு!

இப்ப... படம் பார்க்கிறோம். ரி.வி. பார்க்கிறோம். கிரிக்கெட் மச் பார்க்கிறோம். நல்லா பொழுது போகிறது. உல்லாசமாக இருக்கிறது. ஊட்டிக்குப் போகிறோம். மகாவலிபுரம் போகிறோம். சுற்றும் வரைக்கும் உல்லாசம். மனம் இலேசாகிறது. சிரிக்கிறோம்.

எல்லாம் சரி. இருந்தாலும் இதெல்லாம் உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்திவிடாது. ஏனெனில் இதன் பயன்கள் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வரைக்கும் தான். அதை விட்டு வெளியே வந்ததும் முடிந்து விடுகிறது. அதுதான் "Fun".

ஆனால் "Happiness" என்பது அப்படியில்லை. ஒரு நிகழ்ச்சி முடிந்த பிறகும் நீடிப்பது தான் உண்மையான மகிழ்ச்சி. இதை உல்லாசமான வழியில் அடைந்து விடமுடியாது. அதற்குக் கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கும். அதனாலேயே பலபேர் உண்மையான மகிழ்ச்சியை அடைவதற்கு முயற்சி செய்வதில்லை. நழுவிப் போய் விடுகிறார்கள்.

உல்லாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக சிலபேர் கல்யாணமே வேண்டாம் என்று இருக்கிறார்கள்.

தனியாக வாழ்க்கை நடத்துவது– குழந்தை வேண்டாமென்று நினைப்பது– உல்லாசமாக இருக்கலாம். உற்சாகமாகக் கூடத் தோன்றலாம்.

ஆனால் ஒரு குழந்தையால் ஏற்படக்கூடிய ஒரு மகிழ்வை அவர்கள் இழந்து விடுகிறார்கள்.

"குழலினிது யாழினிது என்ப தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்று சொன்னாரே திருவள்ளுவர்.

அதன் அர்த்தமும் ஆனந்தமும் அவர்களுக்குத் தெரியாமலே போய்விடுகிறது.

சரி! இப்பொழுது உண்மையான மகிழ்ச்சியை அடைவதற்கு என்ன வழி? அடுத்தவர்கள் மீது அன்பு செலுத்துங்கள்.

ஊருக்கும் உலகத்திற்கும் நல்லது செய்யுங்கள். உங்களால் முடிந்த சேவையை செய்யுங்கள். அதுதான் அதற்கு வழி.

புதிதாக திருமணமான ஒரு தம்பதி தேனிலவுக்குப் போய்விட்டு வந்தார்கள்.

அந்தப் பெண் சொன்னார்: "எங்க பிரயாணம் உல்லாசமாகவும் சந்தோசமாகவும் இருந்தது" என்றார்.

"எந்த ஊருக்குப் போய்விட்டு வந்தீர்கள்? என்று கேட்டார்கள். அவர் ஊட்டிக்குப் போய்விட்டு வந்தார். நான் கொடைக்கானலுக்கு போயிட்டு வந்தேன்" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## புனரமைக்கப்பட்டு ஒரு வருடமாகியும் இயங்காதுள்ள முன்பள்ளி

(கோண்டாவில்)

சாந்திகம் நிறுவனத்தினரால் கோண்டாவில் வடகிழக்கு ஞான ஒளி சனசமூக நிலையத்தின் முன்பள்ளி புனரமைக்கப்பட்டு ஒரு வருடமாகியும் இதுவரை முன்பள்ளி மற்றும் சிறுவர் கழகம் என்பன ஆரம்பிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கட்டடத்தைப் புனரமைப்புடன் மட்டும் நின்றுவிடாது இயங்காமல் இருக்கும் முன்பள்ளியை மீண்டும் இயங்குவதற்கு யாராவது உதவ முன்வரவேண்டும் என சனசமூக நிலைய நிர்வாகிகள் கேட்டுக் கொள்கின்றனர். (6-4-36)

## இலங்கை வங்கியின் மாங்குளம் கிளை மீண்டும் தனது சொந்த இடத்தில்

(வடமராட்சி)

இலங்கை வங்கியின் மாங்குளம் கிளையை மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் நிலவிய யுத்தம் காரணமாக இவ்வங்கி இதுவரை மல்லாவியில் தற்காலிகமாக இயங்கி வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இதற்கமைய இலங்கை வங்கியின் மாங்குளம் கிளையை மீண்டும் முன்னர் இருந்த இடத்திலே விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4-10)

## இடம்பெயர்ந்த மக்களில் இதுவரை பிறப்பு பதிவுகளை மேற்கொள்ளாதோருக்கு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பிறந்து இற்றைவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள்தங்களது விபரங்களை அத்தாட்சிப்படுத்துவதன் மூலமாக பதிவுகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் பிறந்தவர்களாயின் வைத்தியசாலையின் கடிதத்துடன் ஜாதகம் அல்லது ஞானஸ்தானப்பத்திரம், பள்ளிவாசல் கடிதம், பாடசாலையின் சேர்வு இடாப்புப் பதிவு, தடுப்பூசி ஏற்றப்பட்டதற்கான படிவம் ஆகிய விபரங்களையும் வீட்டில் பிறந்தவர்களாயின் கிராம சேவையாளரின் கடிதத்துடன் மேற்குறித்த விபரங்களையும் அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்டப் பதிவாளர்களிடம் அல்லது பிரதேச செயலகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அவர்கள் மூலம் பெறப்பட்ட விசாரணையின் பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் இல்லாதவர்கள் சத்தியக் கடதாசி வழங்குவதன் மூலம் உத்தேச வயது அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும் எனவும் வடமாகாண உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (6-7-ப)

## இராசி பலன்

19-02-2010 (மாசி 7, வெள்ளிக்கிழமை)
பஞ்சமி பிற்பகல் 3.05 மணி வரை
அச்சுவினி பின்னிரவு 3.31 மணிவரை
இராகு காலம் 11.02-12.32 மணிவரை
சுபநேரம் 6.32 -8.02 மணிவரை
கெருடாவில் கந்தசாமி கொடி,
நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கொடி, அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், நல்ல முயற்சி, பெரியோர் உதவி, விருந்து பசாரம். |
| இடபம் | மனச்சோர்வு, பிறருக்கு உதவி செய்தல், சுபசெலவு, காரிய அலைச்சல். |
| மிதுனம் | கலந்துரையாடல், எடுத்த காரியம் கைகூடும், தெய்வதரிசனம், தனலாபம். |
| கடகம் | இஷ்டசித்தி, ஆரோக்கிய நிலை, தொழில் மேன்மை, தூரதேசச் செய்தி. |
| சிங்கம் | உத்தியோகபங்கம், எதிர்பாராத செலவு, பிதாசிந்தை, திடீர் பயணம். |
| கன்னி | மனக்கவலை, அஜீரணக் கோளாறு, காரிய தாமதம், தொழில் நன்மை. |
| துலாம் | தெய்வதரிசனம், மனோ தைரியம், பிரயாண நன்மை, தனலாபம். |
| விருச்சிகம் | தொழில் ஆர்வம், தெய்வதரிசனம், தடைப்பட்ட காரியம் கைகூடும், சத்துருஜெயம். |
| தனுசு | பணக்குறைவு, உடல்நலக் குறைவு, சகோதரர் உதவி, குடும்பக் கவலை. |
| மகரம் | மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம், ரோகநிலை, தனவிரயம். |
| கும்பம் | மாதர்நட்பு, காரிய அனுகூலம், தெய்வசிந்தை, அந்நியர் சந்திப்பு. |
| மீனம் | மனோ சங்கடம், தேவையற்ற செலவு, தனவிரயம், வேலைச் சுமை. |

வளவன்

## ஆசிரியர் அறிவுரைப்பு புத்தகங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 31 பாடசாலைகளுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு புத்தகங்கள் இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

மேலும் பருத்தித்துறை கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருந்து வருகை தந்த மாணவர்களுக்குத் தேவையான நூல்களின் விபரங்களைக் கொண்டு வருமாறு கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (6-4-19)

## பொது நூலகம் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழில் தற்போது இயல்பான சூழ்நிலை காணப்படுவதால் யாழ். பொது நூலகத்தை மாலை 7 மணி வரை திறந்திருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். பொது நூலக பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் யாழ். பொது நூலகத்தைப் பார்வையிடுவதற்கு வருகை தருவதை அடுத்து யாழ். மாநகர முதல்வரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்நூலகம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மாலை 7 மணி வரை திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## வடமராட்சியில் வெல்லம் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பம்

பனை அபிவிருத்திச் சபையின் வடமராட்சியிலுள்ள சிங்கநகர் பிரதேசத்தில் அடுத்த வாரம் முதல் வெல்லம் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கா. கோபாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இவ் உற்பத்திகளுக்கு தென்னிலங்கையில் அதிகளவு கிராக்கி நிலவுவதால் இவ் உற்பத்தி சார்ந்த ஏனைய உணவுப் பொருட்களும் தயாரிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய நிலையில் சந்தைப்படுத்தக்கூடிய வசதி வாய்ப்புக்கள் காணப்படுவதால் இதனை உற்பத்தி செய்யும் பணிகளை விரிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6-30)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 110 |
| தக்காளி | 80 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 60 | 50 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 130 | 80 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 20 | 30 |
| பயிற்றங்காய் | 110 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 80 |
| கறிமிளகாய் | 140 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 400 |
| போஞ்சி | 100 | 110 | 120 |
| கத்தரி தம்புள்ள | 25 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 38 | 30 |

# இலங்கையின் ஏற்றுமதி-இறக்குமதி துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிவிப்பு

இலங்கையில் ஏற்றுமதி இறக்குமதித் துறைகளில் கடந்த டிசம்பர் மாதம் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்றுமதித்துறையில் 6.4 வீதம் வளர்ச்சி காணப்பட்ட அதேவேளை, இறக்குமதித் துறையில் 0.5 வீதம் வளர்ச்சி காணப்பட்டதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதில் விவசாயத் துறையிலேயே அதிகளவு இறக்குமதி காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கியால் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2009 டிசம்பரில் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளமை சர்வதேசப் பொருட்கள் சந்தைகளில் தேயிலை மற்றும் இறப்பரால் உருவாக்கப்பட்ட உயர் விலைகள் காரணமாக 40.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த வேளாண்மை ஏற்றுமதிகளால் தூண்டப்பட்டு ஏற்றுமதி வருவாய்கள் 2009 டிசம்பரில் அமெரிக்க டொலர் 723 மில்லியனுக்கு 6.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இறக்குமதிகள் மீதான செலவினம் 2009 டிசெம்பரில் அ.டெலார் 1054 மில்லியனுக்கு 0.5 சதவீதத்தால் சிறிதளவில் வளர்ச்சியடைந்தது.

இவ் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக இடைநிலைப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் விளங்கின.




எவ்வாறாயினும், ஆண்டுக்கு ஆண்டு திரண்ட ரீதியில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மற்றும் இறக்குமதிகள் மீதான செலவு 2009 முறையே 12.7 சதவீதத்தாலும் 29.4 சதவீத்தாலும் வீழ்ச்சியடைந்தன. வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ச்சியான 12ஆவது மாதமாக 2009 டிசம்பரில் 10.4 சதவீதத்தால் அ.டொலர் 330 மில்லியனுக்குச் சுருங்கியது.

இதன்படி திரண்ட வர்த்தகப் பற்றாக்குறை 2008இன் அ.டொலர் 5. 897.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 இல் அ.டொலர் 2.798.6 மில்லியனுக்கு 52.5. சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

2009 யூனிலிருந்து கணிசமானளவில் அதிகரித்த இலங்கைத் தேயிலையின் விலைகள் 2009 டிசெம்பரில் கிலோகிராம் ஒன்றுக்கு அ.டொலர் 4.27 ஐ அடைந்து 32 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இறப்பரின் சராசரி விலை ஆண்டுக்கு ஆண்டு கிலோகிராம் ஒன்றுக்கு 2.53 டொலர் கொண்ட உயர் விலையை 2009 டிசெம்பர் அடைந்தது. இவ்வாண்டில் ஆரம்பத்திலிருந்து அ.டொலர் 240 மில்லியனை உருவாக்கிய மிளகு, எள்ளு ஏனைய எண்ணெய் விதைகள் மற்றும் கொக்கோ போன்ற சிறு வேளாண்மைப் பொருட்கள் நாட்டுக்கான ஏற்றுமதி வருவாய்களின் முக்கிய மூலமாக அதிகரித்து வந்துள்ளது.

2009 டிசெம்பரில் இரத்தினக் கற்களின் ஏற்றுமதிகளிலும் குறிப்பீடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. பெற்றோலிய உற்பத்திகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்,பொறி மற்றும் கருவியின் குறைந்த எற்றுமதிகள் காரணமாக கைத்தொழில் ஏற்றுமதிக்ள் வீழ்ச்சியடைந்தன. மீன், நண்டுகள் மற்றும் சிப்பிகள் ஏற்றுமதிகளின் 25.4 சதவீத அதிகரிப்புக்கு மத்தியிலும் உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்தி களின் ஆண்டுக்கு ஆண்டு ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன.

2009 டிசெம்பரில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2009 டிசெம்பரில் பீப்பா ஒன்றுக்கு அ.டொலர் 78 ஐ அடைந்தமையால் பெற்றோலிய இறக்குமதிகள் மீது ஏற்பட்ட உயர் செலவினம் காரணமாக இடைநிலைப் பொருட்கள் 2009 டிசெம்பரில் அதிகரித்தது.

எனினும் முன்னைய ஆண்டின் டிசெம்பரிலிருந்து இறக்குமதி விலைகளிலான குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காரணமாக உயர் இறக்குமதி அளவுக்கு மத்தியிலும் வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவீனம் வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப் பொருட்களிடையே அரிசி மற்றும் கோதுமைத் தானியத்தின் இறக்குமதிகள் பெருமளவில் அதிகரித்திருக்கையில் சீனியின் இறக்குமதிகள் உயர் விலைகளுக்கும் மத்தியிலும் வீழ்ச்சியடைந்தன.

மோட்டார் சைக்கிள் மற்றும் மின்கருவிகளின் குறைந்த இறக்குமதிகள் காரணமாக உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் சுருக்கமடைந்தன. முதலீட்டுப் பொருட்களின் அனைத்து வகைகளது இறக்குமதிகளும் 2009 டிசெம்பரில் வீழ்ச்சியடைந்தன என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

## தங்கம், வெள்ளி விலைகள்-18.02.2010

| | கொழும்பு | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| தங்கம் ( ஒரு பவுண்-22கரட்) | ரூ. 33,000.00 | ரூ. 33,000.00 |
| தங்கம் (ஒரு பவுண்- 24கரட்) | ரூ. 34,800.00 | - |
| தங்கம் (சிங்கப்பூர் ஒரு பவுண்-22கரட்) | - | ரூ. 34,000.00 |
| வெள்ளி (ஒரு கிராம்) | - | ரூ. 65.00 |

மூலம்-ச்ந்தை நிலவரம்

## நாணய மாற்றுவீதம்-18.02.2010

| நாணயம் | வாங்கும் விலை (ரூபாய்) | விற்கும் விலை (ரூபாய்) |
|---|---|---|
| டொலர் (ஐக்கிய அமெரிக்கா) | 113.60 | 115.19 |
| பவுண் ஐக்கிய இராச்சியம்) | 177.26 | 180.89 |
| யூரோ (யூரோ வலயம்) | 153.38 | 157.04 |
| பிராங்க்ஸ் (சுவிற்சர்லாந்து) | 104.28 | 107.53 |
| டொலர் (கனடா) | 107.40 | 110.91 |
| டொலர் (அவுஸ்திரேலியா) | 100.94 | 103.97 |
| டொலர் (சிங்கப்பூர்) | 80.17 | 82.11 |
| யென் (ஜப்பான்) | 1.2414 | 1.2742 |

மூலம்-இலங்கை மத்திய வங்கி

# சர்வதேச உயர்கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் இரு நிறுவனங்கள் அடுத்த வாரம் யாழில் ஆரம்பம்

மன்ராகுளோபல் எக்ஸ்கியுரிவ் சேர்ப்பிறைவேலிமிற்ற்ற் மற்றும் மன்ரா எடிகியுகேசன் பிறைவேற் லிமிற்ரற் (Mantra Global Executive (Pvt) Ltd and Mantra Education (Pvt) Ltd) ஆகிய நிறுவனங்களின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்படவுள்ளன.

யாழ்.கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிறுவனங்கள் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள சர்வதேச பல்கலைக் கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் யாழ். நகரில் உள்ள இளந் தலைமுறையினருக்கு உயர் கல்வி பெற்று வாழ்க்கையில் முன்னேற உந்துதல் அளிக்கின்றது. இந்நிறுவனம் டிப்ளோமா தொலைக்கல்வி உட்பட பலதரப்பட்ட கல்விக் களங்களை உள்ளடக்கிய திட்டங்களைக் கொண்டுள்ளது.

Mantra Global Executive (Pvt) Ltd எனும் நிறுவனமானது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு குடியகல்வு (Migration), கல்வி (Student), குறுகியகால அனுமதி(Visit),பெற்றோர் (Parent),கணவன்/மனைவி(Spouse)மற்றும் தங்கிவாழ்பவருக்கான (Dependant) அனுமதி, மறுக்கப்பட்ட அனுமதி (Rejections) போன்ற பல்வேறுபட்ட வீசா வகைகளைப் பெற்றுக்கொடுக்கும் தமதுசேவையினை வெற்றிகரமான முறையில் மேற்கொண்டு வருகிறார்கள். Mantra Global Executive (Pvt) Ltd எனும் நிறுவனமானது மாணவர்களுக்கான உயர்கல்வி பற்றிய தேவைகளுக்கான சிறந்த ஆலோசனைகளை வழங்குவதுடன் தேவையைப் பொறுத்து புலமைப்பரிசில் வழங்கி நிதிவசதியை மாணவர்களுக்கு இலகுபடுத்தவும் வழிவகுக்கின்றது.

இவ்விரு நிறுவனங்களின் சேவைகளும் பாடசாலைகளை விட்டு நீங்கிய மாணவர்களுக்கும் ஏனைய நிறுவனங்களில் பணியாற்றும் இளைஞர், யுவதிகளுக்கான கல்வித் தகைமைகளைக் கொண்ட கொண்டவர்களுக்கும் பகிரப்படுகின்றது. இவ்விரு நிறுவனங்களும் இணைந்து நடாத்தும் இலவசக் கருத்தரங்கானது எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் யாழ்.கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரியில் காலை9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இலவச கருத்தரங்கு பற்றிய மேலதிக விபரங்களுக்கு,

41/19,Stratford Place, Colombo 6, Srilanka

Tel:(+94) 11 236 6552 / (+94) 11 436 2588

Fax: (+94) 11 236 6552/ (+94) 11 236 6553, 077 613693

Email : info@themges.com/ canada@themges.com/ australia@themges.com

web: www.themges.com

# நாட்டின் பணவீக்கம் ஜனவரியில் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (அடிப்படை =2002) ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பினால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் 2009இன் இறுதியில் 4.8 சதவீதத்திலிருந்து 2010 ஜனவரியில் 6.5 சதவீத்திற்கு அதிகரித்தபோதிலும் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2010 ஜனவரியில் 3.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்தில் ஏற்பட்டு வரும் படிப்படியான அதிகரிப்பு, அடிப்படையின் தாக்கம் மறைந்து வருவதனையும் அதேபோன்று உலகளாவிய ரீதியில் பண்டங்களின் விலைகள் மீட்சியடைந்து வருவதனையும் இது பிரதிபலிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பொருளாதார செயற்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்காக 2009ஆம் ஆண்டு காலத்தில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையை ஏற்கனவே தளர்த்தியது. இது பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் நிலவி வந்த பணவீக்கத்தின் சாதகமான தோற்றப்பாடு என்பனவற்றினால் சாத்தியமாயிற்று.

இதன் விளைவாக சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கி திருத்தியமைக்கப்படுகின்றன. உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் மெதுவடைந்த பொருளாதார செயற்பாடுகளினால் பாதகமாகப் பாதிக்கப்பட்ட தனியார் துறையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கொடுகடன் 2009ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து பெயரளவு நியதிகளில் அதிகரித்து வருகின்றது.

இத்தகைய அபிவிருத்திகளினைக் கருத்திற்கொண்டு நாணயச் சபை 2010 பெப்ரவரி 15ஆம் திகதி நடாத்தப்பட்ட அதன் கூட்டத்தில் தற்பொழுது இடம்பெற்று வரும் உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாட்டின் மீட்சிக்கு வசதியளிப்பதற்காக தற்போதைய நாயணக் கொள்கை நிலையை தொடர்ந்தும் பேணுவதற்குத் தீர்மானித்தது. நாணயச் சபை அதன் கொள்கை நிலையை மீளாய்வு செய்யும் நோக்கில் பொருளாதார அபிவிருத்திகளையும் வாய்ப்புக்களையும் தொடர்ந்தும் கண்காணித்து வரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை எதிர்வரும் மார்ச் 16ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

# சிரமங்களின் மத்தியில் உறவினர் வீடுகளில் தங்கி வாழும் முல்லை. கரைதுறைப்பற்று மக்கள்

வன்னியில் யுத்த முனைப்புக்கள் தீவிரம் பெற்றிருந்த போது பெருமளவிலான குடும்பங்கள் படகுகள் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டையை வந்தடைந்தனர்.

இத்தகைய குடும்பங்கள் கடந்த இரு மாதங்களின் முன்னர் விடுவிக்கப்பட்டதுடன் இவர்களது படகுகளும் தற்போது கடற்படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளன.

எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசம் இதுவரை விடுவிக்கப்படாமையால் படகுகளை மீளப் பெற்றபோதும் இத்தகைய குடும்பங்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே திருகோணமலையில் உள்ள தங்கள் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கி வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடுவிக்கப்பட்ட தங்கள் படகுகளையும் புல்மோட்டையில் தங்களுக்கு அறிமுகமானோரின் பொறுப்பில் விட்டுவிட்டே திருகோணமலையில் தங்கியுள்ளதாகவும் இவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை கடற்படையினரால் விடுவிக்கப்பட்ட யாழ். குடாநாட்டைச் சேர்ந்தோர் மற்றும் மீள்குடியேற்றம் நடைபெறும் பகுதிகளைச் சேர்ந்தோர் கடல்வழிப்பாதை வழியாக தங்கள் படகுகளைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (6)


வெளிநாட்டு வேலை வாய்ப்பு

KURDISTAN

குர்திஸ்தான் நாட்டின் தலைநகர் ERBIL சர்வதேச விமான நிலையத்தில்

(ERBIL INTERNATIONAL AIRPORT)

உடனடி வேலை வாய்ப்பு

14 நாட்களுள் வீசா பெற்று பயணம் மேற்கொள்ளலாம்.

வெளிநாட்டு முகவருடன் நேர்முகப் பரீட்சை

23.02.2010 (செவ்வாய்கிழமை).

CLEANERS - AIR PORT - REQ No.100

100 விமானநிலைய கிளீனேர்ஸ்.

மாதச் சம்பளம் ரூபா.28,750/= + மேலதிக கொடுப்பனவு உண்டு.

MONTHLY SALARY - US$ 250/-

(S.L.Rs.28,750/=)+ O.T Available.

✳ தங்குமிட வசதி இலவசம் ✳ உணவு இலவசம் ✳ மருத்துவ வசதி இலவசம்.

✳ ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).

வயது: 21+ தொடக்கம் 32 வரை.

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது MR.R.Guna (குணா) என்பவருடன் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வரவும் .

மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

Terms & Conditions

Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.

உங்களது பாஸ்போட் (எல்லா நாட்டுக்குமான-ALL COUNTRIES), 12 பாஸ்போட் Size கலர் படங்களுடனும் (White Background) 23.02.2010 செவ்வாய்கிழமை கொழும்பில் 375, டாம் வீதியில் உள்ள எமது காரியாலயத்திற்கு நேரில் வரவும். ஆங்கில அறிவு அதிகம் வேலையில்லை. இது ஓர் அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

☆ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு.☆

இலங்கையர் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு

TRANSSTAR.

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,

375, Second Floor, Dam Street, Colombo 12.

(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)

Tel: 011 - 471 8936 Mobile: 077-826 3228

S.L.Bureau Labour Licence : 1311.

S.L.Bureau Approval AL/1311/Advt/02/10.

(Near Hulftsdorp Courts - Colombo)

(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)

(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)


# சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே கம்பஹா மாவட்டத்தில் போட்டி

(கொழும்பு)

கம்பஹா மாவட்டம் கட்டான தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் டாக்டர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே போட்டியிடுகின்றார். இதற்கான வேட்பு மனு தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் துணைவியரான டாக்டர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே விசேட வைத்திய நிபுணராவார். தனது கணவரின் மரணத்தைத் தொடர்ந்து சமூக சேவைகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (6)

# இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு 25 மில். டொலர் நிதி தேவை

## ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் படையினருக்கும் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதல்களின்போது இடம்பெயர்ந்தவர்களில் சுமார் இரண்டு இலட்சம் பேரை மீளக்குடியமர்த்தும் வகையில் 23 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக ஐ.நா. வுக்கான உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐ.நா. அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்; வட-கிழக்கில் மீளக்குடியேறிய மக்களின் தன்னிறைவிருத்தி செய்யக்கூடிய திட்டங்களை ஊக்குவிக்கவும் உணவு நிவாரணங்களில் மேலும் தங்கியிருக்கும் சுமார் ஐம்பதாயிரம் குடும்பங்களைத் தடுக்கும் வகையிலும் இந்நிதி தேவைப்படுகின்றது.

டிசெம்பரில் சுமார் 130 ஆயிரம் பேர் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். வடபகுதியில் 80 வீதமான மக்கள் பயிர்ச் செய்கை, விலங்கு வேளாண்மை, மீன்பிடி ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். மீள்குடியேறும் மக்களுக்கு உள்ளூர் விவசாய உற்பத்திகளில் ஈடுபடுவதற்கு உதவவும் அவர்களின் உணவு விடயங்களை முன்னேற்றவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை நிவாரண நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 6 ஆயிரத்து 600இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு அரிசி மற்றும் தானிய வகைகளை மேற்படி ஐ.நா.வுக்கான உணவு மற்றும் விவசாய அமைப்பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (6)

# போலிக்கடவுச்சீட்டின் மூலம் சுவிஸ் செல்ல முற்பட்டவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(கொழும்பு)

போலிக்கடவுச் சீட்டைப் பயன்படுத்தி சுவிஸ்லாந்திற்கு செல்ல முற்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரிற்கு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

குறிப்பிட்ட சந்தேக நபர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீர்கொழும்பு பிரதம நீதவான் ஜயகிரி அல்விஸ் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

சந்தேக நபர் நீதிமன்றத்திடம் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவரிற்கு 10 வருடங்களிற்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த நபரை ஐம்பதாயிரம் ரூபா அபராதத்தைச் செலுத்துமாறும் நீதவான் உத்தவிட்டார்.

2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-14)

# மத்திய வங்கி அதிகாரிகளுக்கு தமிழ்மொழித் திறனை வளர்க்கும் பயிற்சி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி அதிகாரிகள் தமிழ் மொழியில் தேர்ச்சியைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டுள்ள வங்கி நிர்வாகம் இருநூறுக்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கு தமிழ்மொழித் திறனை வளர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 18, 19ஆம் உறுப்புரைகளின் அத்தியாயம் iV இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அரச மொழிக் கொள்கையின் அடிப்படையிலேயே அரசகரும மொழித் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து மத்திய வங்கி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி வங்கியில் சகல தரங்களிலும் சேவையாற்றும் 200இற்கும் அதிகமான அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அரசகரும மொழித் திணைக்களத்தால் தற்போது நடத்தப்படும் பயிற்சியில் பங்கேற்று வருகிறார்கள். எழுத்து மற்றும் வாய் மொழி மூலப் பரீட்சைக்குத் தோற்ற முன்னர் 108 மணித்தியாலயப் பயிற்சியில் பங்கேற்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வகுப்புகளில் பங்கேற்பவர்களின் பேச்சு மற்றும் எழுத்து அறிவை முன்னேற்றுவதற்கும் நிர்வாகம் முன்னுரிமை அளித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கும் நாட்டின் இன ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் தமிழ், சிங்கள சமூகங்களிடையே மொழி வேற்றுமையை இல்லாதொழிப்பதற்கும் இந்நிகழ்ச்சித் திட்டம் உதவியாக இருக்குமென மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (6)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 11

## வையாபாடல்

பேராசிரியர்
**சி.பத்மநாதன்**

### நூலும் அதன் காலமும்

தமிழ் நாடுகளிலிருந்து ஈழத்திற்கு வந்து அடங்காப்பற்று என வழங்கிய வன்னியை அடக்கி அங்கு அதிகாரம் பெற்ற வன்னியரின் வரலாற்றைப் பொருளாகக் கொண்ட நூலே வையாபாடல். செகராசசேகரன் என வழங்கிய முதற் சங்கிலி (கி.பி.1519–61) காலத்து அவைக்களப் புலவரான வையாபுரி ஐயர் இந் நூலை எழுதினார் என்பது இலக்கிய மரபு. பறங்கியரைப் பற்றி அந்நூலிலே கூறப் பெற்றுள்ளதால் பதினேழாம் நூற்றாண்டளவிலே வையாபாடல் அதன் இறுதி வடிவத்தைப் பெற்றது எனக் கருதலாம். காலப்போக்கிலே பிற்சேர்க்கைகளும் திரிபுகளும் நூலில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

ஏட்டுப் பிரதிகள் செல்லரித்தும் சிதைவுற்றும் பழுதடைந்தமையால் நூலில் வரும் பல செய்யுள்கள் தெளிவாகவும் இலகுவாகவும் புரிந்துகொள்ளப்பட முடியாத நிலையில் உள்ளன. வையாபாடலின் வசனரூபமே வையா அல்லது யாழ்ப்பாண நாட்டு வளப்பம் என வழங்கும் நூல்.

ஏனைய ஈழத் தமிழ் வரலாற்று நூல்களிற் போல வையாபாடலிலும் புனைகதைகளும் புராணக் கதைகளும் இடம்பெற்றுள்ளன. நூற்பாயிரம் மல்லிகாவனத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகரைக் குறிப்பிடுவதால் நூலாசிரியர் முள்ளியவளையில் வாழ்ந்தாரென்று ஊகிக்கலாம்.

சுபதிட்டு என்பார் சொல்லிய கதையை ஆதாரமாகக் கொண்டே தான் வையாபாடலைப் பாடினார் என்று ஆசிரியர் கூறுவதால் ஏதோவொரு முதல்நூலின் துணையுடனே வையாபுரி ஐயர் வையாபாடலை எழுதியிருக்கவேண்டும். வன்னியரின் வீரச் செயல்களைப் பொருளாகக் கொண்ட ஒரு மான்மியமே வையாபாடலுக்கு ஆதாரமாயிருத்தல் வேண்டும். இராமாயணத்தில் வரும் சில கதைகளையும் யாழ்ப்பாணன் , மாருதப்புரவீகவல்லி என்போர் பற்றிய கதைகளையும், வன்னியர் வரலாற்றோடு இணைத்து அவற்றை வையாபுரி ஐயர் நூல் வடிவில் வழங்கியுள்ளார்.

### யாழ்ப்பாணன் - சுழங்கைச் சக்கரவர்த்தி

யாழ்ப்பாணன் , கூழங்கைச் சக்கரவர்த்தி ஆகியோர் பற்றிய ஐதீகங்களை வையாபாடல் மேல்வருமாறு கலந்துரைக்கின்றது.

கலியுகம் 4,30,000 ஆண்டு கழிந்த பின் தவத்தால் அளவற்ற ஆற்றல் பெற்றிருந்த வச்சிரவாகுவின் மகனாகிய இராவணன் தசரதராமனுடைய காதலியாகிய சீதையை இலங்கைக்குக் கவர்ந்து சென்றான்.

எனவே இராம–லக்ஷ் மணர் வாலியைக் கொன்று அனுமன், சுக்கிரீவன், சாம்புவன், குமுதன், ஆதித்தன் என்ற வானரத்தலைவரின் துணையோடு இலங்கைக்கு வந்தார்கள். அங்கு அவர்களை விபீஷணன் வரவழைத்தான். இராவணனைக் கொன்ற பின் இராமன் தன் துணைவியைச் சிறைமீட்டு விபீஷணனை இலங்கை மன்னனாக முடிசூட்டினான். வடநாட்டுக்கு திரும்பிச் செல்லும்போது இராமேஸ்வரத்தில் இராமன் ஒரு சிவாலயத்தை அமைத்திருந்தான். விபீஷணனுடைய ஆட்சியில் அவன் அரண்மனையில் யாழ் வாசித்து மன்னனை பெரிதும் கவர்ந்த யாழ் பாடி இலங்கையில் வடகரையில் உள்ள மணற்திடரைப் பரிசிலாகப் பெற்றான். அந்நிலத்தைப் பண்படுத்தி கமுகு, தென்னை, மா, பலா போன்ற செழுமையான மரங் களைக் கொண்ட வளம் பொருந்திய நில மாக்கி ஆயிரம் குடிகளை அங்கே இருத்தி னான்.

யாழ்ப்பாடி வடநாடு மதுரைக்குச் சென்று தான் பெற்ற நாட்டை ஆள்வதற்கென ஒரு புதல்வனை அனுப்புமாறு குலகேது மகாராசனை வேண்டினான். இவ் வேண்டுகோளுக்கிணங்கிய மதுரை மன்னன் கை ஒன்று சொத்தியாகவிருந்த தன் புதல்வனை யாழ் பாடியோடு அனுப்பினான். தன் நாட்டிற்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டு அதனை மதுரையால் வந்த இளவரசனுக்கு யாழ்பாடி கொடுத்தான். மேலும், யாழ்பாடி அவ்விளவரசனைக் கூழங்கைச் சக்கரவர்த்தி எனப் பட்டஞ் சூட்டினான்.

யாழ்ப்பாணன் கதை கைலாயமாலையில் மேல்வருமாறு வருகின்றது.

.......................... மங்காத
பாவலர்கள் வேந்தன் பகருமியாழ்ப்பாணன்
காவலன் றன்மீது கவிதை சொல்லி–நாவலர்முன்
ஆனகவி யாழினமைவுறு வாசித்திடலும்
மானபரன் சிந்தை மகிழ்வாகிச் – சோனைக்
கருமுகினேருங் கரன் பரிசிலாக
வருநகரமொன்றை வழங்கத் – தருநகர
மன்று முதல் யாழ்ப்பாணமான பெரும் பெயராய்
நின்ற பதியினெடுங்காலம் – வென்றிப்
புவிராசன் போலப் புகழினுடனாண்ட
கவிராசன் காலங் கழிய
பெரிதுங் கவர்ந்த

யாழ்ப்பாணன் ஆண்டதினாலே ஈழத்தின் வடபகுதி யாழ்ப்பாணம் என்னும் பெயரைப் பெற்றதென்பது வையாபுரி ஐயர், முத்துராசகவிராசர் ஆகிய இருவரதும் முடிபாகும். மேலும், யாழ்ப்பாணனே வட இலங்கையிலே குடிகளை நிறுவினான் என்பதும் மரபு.

ஆயினும், யாழ்பாடி பற்றிய கதை வரலாறன்று; அது ஒரு புனைகதை. யாழ்ப்பாணன் என்றொருவன் வட இலங்கையிலே வாழ்ந்தான் என்பதைச் சான்றுகளுடன் நிறுவுவது சிரமம். ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்துக்கு முற்பட்ட வரலாறு தமிழ் வரலாற்று மரபுகளில் இடம்பெறவில்லை.

தமிழ் நூல்களை எழுதியவர்களும் அக்காலத்து யாழ்ப்பாண வரலாற்றைப் பற்றி அறிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணம் என்ற பெயரின் உற்பத்தியை விளக்கும் நோக்கத்துடன் இக் கதை உருவாயிருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் என்ற பெயர் எவ்வாறு தோன்றியது என்பதை வரலாற்றடிப்படையிலே விளக்கிக் கொள்வதற்குத் தக்க சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. சிங்கள மன்னர் ஆண்ட காலத்தில் யாப்பா என்ற பட்டமுடைய இளவரசன் இருந்து ஆண்டதால் இப்பெயர் வழக்கில் வந்திருக்க வேண்டுமென்று சிலர் கருதுவர். எனினும் அநுராதபுர காலத்திலோ பொலநறுவைக் காலத்திலோ யாப்பா என வழங்கிய எந்தவொரு இளவரசனும் யாழ்ப்பாணத்திலிருந்து அரசு செலுத்தினான் என்று கொள்வதற்கு எந்தவிதமான சான்றுகளும் இல்லை.

14 ஆம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பட்ட **நிகாய, சங்கிரகய** எனும் நூலே ***யாப்பா பட்டுன*** என்ற நகரைக் குறிப்பிடும் முதல் நூல். அதன்பின் எழுதப்பெற்ற சிங்கள நூல்கள் யாவும் ஆரியச்சக்கரவர்த்திகளின் தலைநகரை யாப்பாப் பட்டுன என்று குறிப்பிடுகின்றன. லக்கண்ண தண்டநாயக்கனென்ற மதுரையிலிருந்து தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த விசயநகர இளவரசரின் திருமாணிக்குழி கல்வெட்டிலே (கி.பி. 1432) யாழ்ப்பாணையன் பட்டினம், ஈழம் என முறையே யாழ்ப்பாணமும் கோட்டையும் குறிப்பிடப் பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தைக் குறிக்கும் தமிழ் ஆவணங்களுள் இதுவே காலத்தால் மிக முந்தியது.

15ஆம் நூற்றாண்டின் நடுவில் யாழ்பாடி கதை வழக்கிலிருந்ததென்பதற்கு சாசனம் தரும் தகவலை சான்றாகவும் கொள்ளலாம். யாழ்ப்பாணையனின் பட்டினம் என்றதனாலேயே யாழ்ப்பாணையன் பட்டினம் என்ற பெயர் தோன்றியிருக்கக் கூடும்.

17ஆம்நூற்றாண்டிலே ஈழ வரலாறு பற்றி எழுதிய குவோறோஸ் சுவாமியாரும் யாழ்ப்பாணம் பற்றிய கதையை அறிந்திருந்தார். யாழ்ப்பாணனின் பட்டினம் என்றதனால் யாழ்ப்பாணப் பட்டினம் என அந்நகரை குறிப்பிடுகின்றனர் என அவர் சொல்வது கவனித்தற்பாலது.(தொடரும்)



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் மரதன் ஓட்டப் போட்டியின் ஆரம்ப வைபவத்தையும், பத்து வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் மாணவர்கள் ஓடுவதையும், கனிஷ்ட ஆண்களுக்கான போட்டியில் வெற்றி வீரர் இல்லக் கொடியுடன் முடிவிடத்தை அடைவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-கோப்பாய் நிருபர்)

# சண்டே லீடருக்கெதிரான வழக்கு ஒத்திவைப்பு

தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் செய்தி வெளியிட்டமை தொடர்பாக ஆயிரம் மில்லியன் ரூபா நட்டஈடு கோரி சண்டேலீடர் பத்திரிகைக்கும் லீடர் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கும் எதிராகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள வழக்கு கல்கிசை மேலதிக மாவட்ட நீதிபதி பான்ஸ் குணவர்த்தன முன்னிலையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கிற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள மிக் விமானம் தொடர்பான தொழில்நுட்ப அறிவைப் பெற வேண்டியிருப்பதால் ஒரு திகதியை ஒதுக்குமாறு இதற்கு முந்திய வழக்குத் தினத்தில் பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதன் பிரகாரம் மிக் விமானம் தொடர்பான தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்காக மே மாதம் 26 ஆம் திகதியை மேலதிக மாவட்ட நீதிபதி வழங்கினார்.

இதனையடுத்து இந்த வழக்கு விசாரணை மே மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது. (6)

வட மத்திய மாகாண

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வழங்கப்பட்டதை ஆட்சேபித்து மனுத்தாக்கல்

வடமத்திய மாகாணத்தில்அரசியல் பழிவாங்கல் காரணமாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் 102 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதை எதிர்த்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கமும் இலங்கை ஆசிரியர் சங்கமும் நேற்று முன்தினம் மனுத் தாக்கல் செய்தன.

இந்த மனுவை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அநுராதபுரம் பிரதே அலுவலகத்தில் குறிப்பிட்ட இரண்டு தொழிற்சங்கங்களினதும் பிரதிநிதிகள் கையளித்தனர்.

முதலாம் தரத்தைக் கொண்ட ஒன்பது அதிபர்களுக்கும் 93 ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டதை ஆட்சேபித்து இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடமத்திய மாகாணப் பதில் கல்விப் பணிப்பாளர், மேலதிக கல்விப் பணிப்பாளர், பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கெப்பித்திகொல்லாவ வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (6)

# அடுத்த ஆண்டில் சனத்தொகை மதிப்பீடு

(கொழும்பு)

அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள சனத்தொகை மதிப்பீட்டின் முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் 10 வருடங்களுக்கொருமுறை இலங்கையில் சனத்தொகை மதிப்பீடு நடத்தப்படுகின்றது.

இறுதியாக 2001 இல் இலங்கையில் சனத்தொகை மதிப்பீடு நடத்தப்பட்டபோது வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமே கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

அடுத்த ஆண்டில் நாடுமுழுவதும் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுமென புள்ளிவிபரவியல் திணைக்களம் கூறுகிறது.

இதற்கு முன்னோடியாக கணக்கெடுப்பிற்கு தேவையான செயலாளர் பிரிவுகளின் எல்லை, கிராமசேவையாளர் பிரிவு எல்லை மற்றும் கிராம எல்லைகளைக் குறிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன

மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள். கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத்தின் துறைசார் அதிகாரிகளின் ஒத்துழைப்பு இந்தக் கணக்கெடுப்புக்காகப் பெற்றுக்கொள்ளப்படுவதாகத் திணைக் களம் மேலும் தெரிவிக்கிறது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கான சனத்தொகை மதிப்பீடு 30 வருடங்களுக்குப் பின்னர் இம்முறை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (6)

# வவுனியா சிறுவர் காப்பகத்திற்கு புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் நிதியுதவி

(கொழும்பு)

கனடாவிலுள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் வவுனியாவிலுள்ள சிறிலியசெவன சிறுவர் காப்பகத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளனர்.

கனடாவிலுள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் சிறுவர் காப்பகத்திற்கு நன்கொடையாக வழங்கிய 20 ஆயிரம் அமெரிக்க டொலருக்கான காசோலையை அந்நாட்டிலிருந்து வருகை தந்துள்ள குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

கனடா, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கணேசன் சுகுமார், சம்மேளனத்தின் உதவித் தலைவர் கலாநிதி பொன் சிவாஜி, கனடாவிற்கான இலங்கை சுற்றலாத்துறை தூதுவரும் சம்மேளனத்தின் பொருளாளருமான நாளக வீரசிங்க, முன்னாள் பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன ஆகியோர் காசோலையை கைளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (6)

# கலாபூஷணம் மணிமேகலை 64 வது வயதில் காலமானார்

இலங்கையின் பிரபல திரைப்பட மேடை வானொலி தொலைக்காட்சி நடிகை மணிமேகலை ராமநாதன் தனது 64 ஆவது வயதில் நேற்று முன்தினம் மாலை காலமானார்.

சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் சத்திரசிகிச்சையின் பின்னர் களுபோவில தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பைலட் பிரேம்நாத் திரைப்படத்தில் சிவாஜி கணேசனுடன் சில காட்சிகளில் தோன்றி நடித்த மணிமேகலை இலங்கையில் தயாரான மேலும் சில திரைப்படங்களிலும் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளார்.


2004 ஆம் ஆண்டில் தேசிய நாடக விழாவின் போது நடிப்புக்கான விசேட விருதையும் 2008 ஆம் ஆண்டில் கலாபூஷணம் விருதையும் பெற்றார். நூற்றுக் கணக்கான வானொலி நாடகங்களிலும் மேடை நாடகங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் அவர் நடித்துள்ளார்.

பிரபலமான நாட்டுக்கூத்து கலைஞர் அமரர் நடிகமணி வீ.வீ.வைரமுத்து உட்பட பல நாட்டுக்கூத்துக் கலைஞர்களுடன் நாட்டுக் கூத்துகள் பலவற்றில் தோன்றிப் பாடி நடித்துள்ள மணிமேகலை வானொலியில் ஒலிபரப்பான பல நாட்டுக் கூத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்.

நாடகக் கலைஞராக மட்டுமன்றி ஒரு சிறந்த பாடகியுமான மணிமேகலை ராமநாதன் பல தனியிசை நிகழ்ச்சிகளை நடத்தி வெற்றிகண்டுள்ளார். நகைச்சுவை, குணசித்திரம் என எவ்வகை நடிப்பெனினும் தனது நடிப்பாற்றலால் சிறந்து விளங்கிய மணிமேகலையின் இறுதிக் கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படுமென உறவினர்கள் தெரிவித்தனர். (6)

# இம்முறை பொதுத்தேர்தலில் வாசுதேவ நாணயக்கார ஐ.ம.சு.முன்னணி சார்பில் போட்டியிடவுள்ளார்

(கொழும்பு)



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான வாசுதேவ நாணயக்கார இம்முறை பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசியலமைப்பை மாற்றும் நோக்கிலேயே தேர்தலில் போட்டியிடுவதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் இடதுசாரி முற்போக்கு சக்திகளுடன் இணைந்தாகும். இதனை மேலும் வலுப்படுத்தி நாட்டில் வாழும் சாதாரண மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்த வேண்டும்.

அது மட்டுமல்லாது ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசியலமைப்பை முற்றாக மாற்ற வேண்டும். ஜனநாயகத்தை மக்களுக்கு முழுமையாக வழங்க வேண்டும்.

திறந்த பொருளாதாரத்திற்குப் பதிலாக எமது நாட்டுக்கு தேவையான விதத்திலான பொருளாதாரத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். விசேடமாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

சர்வதேச ரீதியில் ஏகாதிபத்திய நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை பேணாத அதே வேளை விரோதித்துக் கொள்ளாத வெளிநாட்டுக் கொள்கையை கடைப் பிடித்தல், கல்வி , சுகாதாரம் உட்பட மக்களின் நலன் புரிச் சேவைகளுக்காக அதிக நிதியை ஒதுக்குதல்.

இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே தேர்தலில் போட்டியிடுகின்றேன். இதற்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பேன் என்றார். (6)

# ஆளுநர் கிண்ண சுற்றுப்போட்டி

ஆளுநரின் ஆலோசனைக்கமைய வடமாகாணக்கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உதைப்பந்தாட்டம், கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி என்பன எதிர்வரும் மார்ச்மாதம் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று அரச அதிபர் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் விளையாட்டுத்துறை செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள், உதவி உடற்கல்விப் பணிப்பாளர்கள், மாநகர ஆணையாளர், சகல பிரிவுவிளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், நகர்ப்புற பாடசாலை அதிபர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (6)


யாழ் மண்ணில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

MARIA MONTESSORI இன் புதிய அறிமுகம்

BCHS யாழ் மண்ணில் சிறார்களின் நலன் கருதி



தன்னுடைய இன்னுமொரு பரிமாணத்தினை உருவாக்குகின்றது. இந்த வகையில் சிறார்களுக்கான சர்வதேச தரத்திலான ஆங்கில மொழி மூலம் MONTESSORI யினை உருவாக்கியுள்ளது.

இங்கு மாணவருக்குரிய முழுமையான கற்பித்தல் சர்வதேச தரம் வாய்ந்ததோடு MARIA MONTESSORI முறையினூடாக சிறுவர்கள் பயிற்றுவிக்கப்படுவர். அத்தோடு சிறார்களின் ஆளுமை விருத்திக்குரிய செயற்றிட்டம் உளவியல் ரீதியான செயற்றிட்டம் போன்றவற்றினூடாக சிறுவர்களினை உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதே எமது நோக்கம்.

ஆரம்பிக்கப்படும் வகுப்புகளும் அதற்கான வயதெல்லைகளும்

| GRADE | LOWER NURSERY | UPPER NURSERY | PRE GRADE |
| --- | --- | --- | --- |
| AGE GROUP | 2 ½ - 3 | 3 - 4 | 4 - 5 |

- சர்வதேச தரத்திற்கேற்ப சிறார்களின் சிறந்த எதிர் காலத்தையும், தேவையையும் கருத்திற் கொண்டு ஆங்கில மொழி மூலம் கல்வி, சிறந்த பயிற்சி.
- நன்கு பயிற்றப்பட்ட துறைசார் ஆசிரிய குழாம்,
- நவீன தொழில் நுட்பத்தில் மாணவர்களுக்குரிய பயிற்சிகள் (Audio & Video Visual முறையினூடாக)
- Montessori க்கென சர்வதேச தரம் கொண்ட பாடநெறிகள். இவ்வாறான பாடநெறிகளைப் பயிலுவதன் மூலம் மாணவர்களின் புத்திக் கூர்மையையும் சிந்தனாசக்தியையும் அதிகரிக்க முடியும்
- கலை கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் இசை சார்ந்த பயிற்சிகள்

வரையறுக்கப்பட்ட அனுமதிகளே உள்ளதால் February 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

BCHS No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.

Tel: 021 2224550 HotLines: 0714299935 / 0777222422 Email: info@bchs.lk

# வீதி புனரமைக்கப்படாமையால் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமம்

(வடமராட்சி)

யாழ்ப்பாணம் –வவுனியாவுக்கிடையிலான ஏ-9 வீதியில் குறித்த சில இடங்களில் வீதி பெரும் சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வீதியால் பயணம் மேற்கொள்வது மிகவும் சிரமமாகவுகள்ளதாகவும் இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் வாகன சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கனகராயன் குளத்திலிருந்து ஓமந்தைப் பகுதிவரையான வீதியே படுமோசமாக சேதமடைந்து காணப்படுவதாகவும் வாகனங்கள் இவ் வீதியை விட்டு விலகி வீதியின் கரையோரமாகவே பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உரியவர்கள் இதுவரை இவ்வீதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதும் இவ் விபத்துக்களுக்கு காரணமாக அமைகின்றன எனக் குறிப்பிடப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியைப் புனரமைப்பு செய்யமுன்வரவேண்டும் எனவும் தற்காலத்தில் இவ் வீதியூடாக அதிகளவில் போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருவதால் பொதுமக்களின் நன்மை கருதி இவ் வீதி உனடியாக புனரமைக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-4-10)




# ஓமந்தைக்கான புகையிரத சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

(வடமராட்சி)

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் ஓமந்தைக்கான புகையிரத சேவை துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும் இதுவரை தாண்டிக்குளம் வரை செல்லும் புகையிரதம் விரைவில் ஓமந்தை வரை தனது சேவையை நீடிப்புச் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை புகையிரத நிலையம் வரை புகையிரதப் பாதை திருத்தவேலைகள் நடைபெற்று வருவதாகவும் இதில் திணைக்களத் தொழிலாளர்களை ஈடுபடுத்தி புகையிரத வீதியை சமப்படுத்தி கருங்கற்கள் பரவி செப்பனிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் திருத்தவேலைகள் முடிவடைந்ததும் தண்டவாளங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் விரைவில் ஓமந்தைக்கான புகையிரத சேவை இடம்பெறவுள்ளதாகவும் புகையிரத திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (6-4-10)

# கோண்டாவில் கிழக்கு பகுதியில் — மீண்டும் கசிப்பு உற்பத்தி —

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு பகுதியில் மீண்டும் கசிப்பு உற்பத்தியும் வியாபாரமும் மேற் கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் குறிப்பிட்ட சில வீதிகளின் ஊடாக காலை, மாலை நேரங்களில் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இது தொடர்பாக பொலிஸார் மற்றும் மதுவரி திணைக்களத்தினர் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக குறைந்திருந்த கசிப்பு உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வறுமைக்கோட்டுக்குட்பட்டு வாழும் எமக்கு அரச தனியார் துறையினர் மாற்றுத் தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி வருமானத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் கசிப்பு உற்பத்தியை கைவிடுவதாகவும் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (6-4-36)

# கணனி வலைப் பின்னலுடன் இணையும் ஆரம்ப விழா

இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையின் கோப்பாய் அலுவலகம் சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் நோக்குடன் கணனி வலைப்பின்னல் சேவையுடன் இணையவுள்ளளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இலங்கை வங்கியின் கோப்பாய் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் கோப்பாய் பிரிவின் பொறுப்பதிகாரி மு.தவபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரையை கோப்பாய் கந்தசாமி கோயில் பிரதம குரு பிரம்மஸ்ரீ பூரண கீதச் சந்திரக்குருக்கள் மற்றும் கோப்பாய் பங்குத் தந்தை அருட்தந்தை எப்.எல். என். குரூஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர். (6-4)

# புவி தினத்தை முன்னிட்ட விழிப்புணர்வுப் போட்டிகள்

நல்லூர் பிரதேச செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவு உலக புவி தினத்தை முன்னிட்டு பிரதேச மட்டத்தில் விழிப்புணர்வு சித்திரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

இப் போட்டி பாடசாலை மற்றும் திறந்த மட்டங்களில் கனிஷ்ட, சிரேஷ்ட ஆகிய பிரிவுகளில் நடைபெறவுள்ளதுடன் இப்போட்டியில் கோள வெப்பமாதலும் காலநிலை மாற்றமும், நீரின் முக்கியத்துவம்,சுற்றுச்சூழலை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் கருப்பொருள் அமைதல் வேண்டும்.

சித்திர படைப்பின் பின்புறத்தில் சுய விபரங்களைக் குறிப்பிட்டு மாணவர்கள் பாடசாலை அதிபர் மூலமும் திறந்த போட்டியாளர் கிராம அலுவலர் மூலமும் உறுதிப்படுத்த வேண்டும்.

வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில், சான்றிதழ் வழங்கப்படுவதுடன் கருப்பொருளுக்கேற்றவாறு கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள், கேலிச்சித்திரம், விழிப்புணர்வு சித்திரம் போன்ற ஆக்கங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம்திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக காணிப்பயன்பாட்டு திட்டமிடல் பிரிவில் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார். (6-30-ப)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் சேவையில் இருந்து கடந்த ஆண்டுகளில் ஓய்வுபெற்ற மற்றும் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் சங்கத்தலைவர் ச.க.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

# கபடிப் போட்டியில் சம்பியன்

(சாவகச்சேரி)

தென்மராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே அண்மையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கல்வயல் ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் கொடிகாமம் துர்க்கா விளையாட்டுக்கழகமும் சம்பியனாகியுள்ளன. (6-4-29)

# தாக்குதலில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் ஒருவரையொருவர் முரண்பட்டதில் அதனை விசாரிப்பதற்கு மாணவர் ஒருவரின் வீட்டிற்கு சென்ற தகப்பனார் தாக்குதலுக்கிலக்காகியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பண்டத்தரிப்பில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் கேதீஸ்வரன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த நபரினை அவ் வீட்டுக்காரர்கள் தாக்கியதில் கடுமையான காயங்களுடன் அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-30)

# தனியார் பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்து கழகத்தினால் பருத்தித்துறையில் இருந்து வவுனியாவுக்கான பேருந்து சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இச்சேவை தினமும் காலை 4.45 மணி முதல் 10 மணிவரை நடைபெற்று வருவதாக கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (6-4-10)

# பதினோராந்திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் சாந்தி சமாதானத்துடன் வாழ வேண்டுமெனப் பிரார்த்தித்து மாதாந்தம் நடாத்தி வரும் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வில் பதினோராந் திருமுறை முற்றோதல் கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நல்லூர் ஸ்ரீ மூத்தவிநாயகர் ஆலயத்தில் ஆலய தர்மகர்த்தா சபையினரின் அனுசரணையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆலயப் பூசையைத் தொடர்ந்து நடைபெறும் இம் முற்றோதல் நிகழ்வில் அடியார்கள் பங்குபற்றி பயன் பெறலாம் என திருமுறை மன்றத்தினர் தெரிவிக்கின்றனர். (6-4)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான இளமானிப்பட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க முடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6-4)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் அ. அருணந்தி சிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தூர் வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் த.நடராசா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் த.சிவகுமார், கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டுத்துறை அலுவலர் எல்.அனுராகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய ஆசிரியைதிருமதிகௌசலா நடராசா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிசி.சி. தமிழ்க்கலவன்பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் ப.பாலபவான் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல் லுநர் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி ச.சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் மோ.ஜெ.லோரன்ஸ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்புவிருந்தினராக வலிகாம வலய வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பிறேமா அம்பிகைபாகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-ப)

✠✠✠

(அல்வாய்)

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் செ. செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வே.சிவ யோகன் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-19)

✠✠✠

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வியமைச்சின் தேசிய ஆலோசகர் எம். அப்துல் வகிட் கலந்துகொள்ளவுள்ளார். (6-ப)

✠✠✠

(அல்வாய்)

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் க.மு.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பிகை பஞ்சலிங்கம் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய தபாலதிபர் பொ.திருச்செல்வம் கலந்து கொள்ளவுள்ளார். (4-19)

# இந்தியாவிலிருந்து மேலும் ஒரு தொகுதி மருந்துப்பொருட்களை கொண்டுவர ஏற்பாடு

இந்தியாவிலிருந்து மேலும் ஒரு தொகுதி மருந்துப் பொருட்களைக் கொண்டுவருவதற்கு சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துப் பொருட்கள் கொண்டு வரப்பட்ட பின்னர் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படுமென அமைச்சு தெரிவிக்கிறது.

கடந்த காலங்களில் சில மருந்துப் பொருட்கள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததாக சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ் தெரிவித்தார்.

இதன் காரணமாக வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதேவேளை வட கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அதிகள விலான மருந்துப் பொருட்களை ஒரே தடவையில் அனுப்புவதற்குச் சுகாதார அமைச்சுக்கு நேர்ந்தாகவும் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

மருந்துப் பொருட்களை இலங்கைக்குக் கொண்டுவருவதற்காகச் சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவு அத்தியட்சகர் உள்ளிட்ட சில அதிகாரிகள் இந்தியா சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. (6)

# நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்,முஸ்லிம் மக்கள் புத்திசாதுரியமான தீர்மானங்களை எடுக்க வேண்டும்

## அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் புத்திசாதுரியமான தீர்மானங்களை எடுக்கவேண்டும் என தேச நிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெறவுள்ள தேர்தல் சகல மக்களுக்கும் மிகவும் முக்கியமான தேர்தலாக அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் நிதானமாக சிந்தித்து செயற்படவேண்டிய காலம் மலர்ந்துள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் கடந்த ஜனாதிபதித்தேர்தலின் போது வடக்கு, கிழக்கு மக்கள் சில அரசியல் சதிகாரர் களின் சதி வலையினால் எதிர்க்கட்சிக்கு ஆதரவளித்தாக சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் சேவையாற்றுவார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# மர்மமான முறையில் தாம் திடீரென விடுதலை செய்யப்பட்டதாக சந்தனசிறிமல்வத்த தெரிவிப்பு

(கொழும்பு)

தனது திடீர் விடுதலை மர்மமான முறையில் அமைந்துள்ளது என லங்கா பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட விதம் மற்றும் விடுதலை செய்யப்பட்ட விதம் ஆகியன மர்மமான முறையில் அமையப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்கு மூலம் ஒன்றைப் பதிவு செய்து கொள்வதற்காக என அழைத்துச் செல்லப்பட்ட தம்மை புலனாய்வுப்பிரிவினர் தடுத்து வைத்தாகவும் அவர் தெரிவித்துள்ளார். தாம் மிகவும் அதிஷ்டசாலி எனவும் அல்லது லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக னலியகொடவிற்கு நேர்ந்த கதியே தமக்கு ஏற்பட்டிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் லங்கா பத்திரிகைக்கு ஏதேனும் தனிப்பட்ட குரோதங்கள் காணப்படுகின்றனவா என புலனாய்வுப்பிரிவினர் விசாரணை நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பத்திரிகையில் வெளியான சில செய்திகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டதாகவும் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளுடன் தொடர்பு இருக்கின்றதா என வினவப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவிற்கு அமைய கைது செய்யப்பட்ட தாம் நீதிமன்றின் உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் பல்வேறு குழப்பங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறு எனினும் தமக்கு பிணை வழங்கப்படவில்லை எனவும் வெறுமனே விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தமது கைது மற்றும் விடுதலை புரியாத புதிராகவே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் இந்த விவகாரங்கள் தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்து குறித்து சட்டத்தரணிகளின் ஆலோசனையை நாடியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (6)

# பஸ் ஆற்றுக்குள் கவிழ்ந்ததில் 23 பேர் பலி

(லக்னோ)

உத்தரபிரதேச மாநிலம் ஜலாவுன் மாவட்டத்தில் உள்ள ருத்ரபுர் என்ற கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திருமண நிகழ்ச்சி நடந்தது. மத்திய பிரதேசத்தில் உள்ள முரைனா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஒரு பஸ்சில் அதற்கு சென்று கொண்டு இருந்தனர்.

பஸ்சுக்குள் மொத்தம் 73 பேர் இருந்தனர். குறிப்பிட்ட நேரத்திற்குள் திருமணத்துக்கு செல்ல வேண்டும் என்பதற்காக பஸ்சை சாரதி வேகமாக ஓட்டினார். உத்தரபிரதேசம் மற்றும் மத்தியபிரதேசம் மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஒரு ஆற்றின் பாலத்தின் மீது பஸ் சென்ற போது கட்டுப்பாட்டை இழந்து திடீரென ஆற்றுக்குள் பாய்ந்தது.

அதனால் பஸ்சுக்குள் இருந்த அனைவரும் ஆற்றில் மூழ்கினர். உடனே அருகில் உள்ள கிராமத்தை சேர்ந்தவர்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இவ்விபத்தில் மணமகனின் தந்தை உட்பட 23 பேர் பலியாகியதுடன் 50 பேர் காயமடைந்தனர். (6)


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

# இலங்கை வங்கி திருநெல்வேலி கோப்பாய் அலுவலகம்

## கணனி வலைப்பின்னல் சேவையுடன் இணையும்

## ஆரம்பவிழா

காலம்: 19.02.2010 (வெள்ளிக்கிழமை)
நேரம்: காலை 8.30 மணி
இடம்: இலங்கை வங்கி, கோப்பாய்

தலைமை
திரு.மு.தவபாலன்
(பொறுப்பதிகாரி, இலங்கை வங்கி, கோப்பாய்.)

பிரதம அதிதி
உயர்திரு. N சிவரட்ணம் அவர்கள்
(உதவி பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடபிராந்தியம்)

ஆசியுரை
பிரம்மஸ்ரீ .பூரணகீதச் சந்திரக் குருக்கள்
(கோப்பாய் கந்தசுவாமி கோயில்)
அருட்தந்தை (FLN .குருஸ்,
(பங்குத் தந்தை, கோப்பாய்)



தேசத்தின் வங்கியாம் இலங்கை வங்கி
மேலும் பன்முக சேவையில் தன்னை அர்ப்பணம்
செய்யவேண்டி வாழ்த்தும் வாடிக்கையாளர்கள்

சிறப்பு விருந்தினர்கள்
உயர்திரு. R. ஜெயேந்திரா
(செயல்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, வடபிராந்தியம்)
உயர்திரு V.S. சிவநாதன்
(மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
உயர்திரு. E. பிரேமராஜன்
(முகாமையாளர், இலங்கை வங்கி,திருநெல்வேலி)
உயர்திரு C.A. மோகன்ராஸ் (பிரதேச செயலர், கோப்பாய்)
உயர்திரு. T. நடராசா
(செயலாளர், பிரதேச சபை, வலி–கிழக்கு)
உயர்திரு. R. இராசசேகரம்
(அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)
Mr.G.S.K.Meegakumpura
( OIC Police Station,
Kopay Division)

| | | | |
|---|---|---|---|
| அருள் படமாடம் கோப்பாய் சந்தி, கோப்பாய். | செல்வன்ஸ் டீசல் என்ஜினியஸ் கோப்பாய் சந்தி, கோப்பாய். | கர்ஷி பான்சி ஹவுஸ் மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு. | மெடி எயிட்ஸ் பாமசி இருபாலைச் சந்தி, கோப்பாய். |
| கஜமுகன் தொலைத் தொடர்பகம் கோப்பாய் சந்தி, கோப்பாய். | AMT ரான்ஸ் போட் இருபாலைச் சந்தி, கோப்பாய். | கலைவாணி கல்வி நிலையம் கோப்பாய் வடக்கு, கோப்பாய். | கண்ணகைஅம்பாள் களஞ்சியம் கோப்பாய் வடக்கு, கோப்பாய். |
| ஐங்கரன் வெதுப்பகம் பருத்தித்துறை வீதி, கோப்பாய். | சரஸ்வதி விலாஸ் கோப்பாய் சந்தி, கோப்பாய். | அபிராமி மருந்தகம் பருத்தித்துறை வீதி, நீர்வேலி. | செல்வன் ஸ்ரோஸ் பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| செல்லக்கிளி ஸ்ரோஸ் பருத்தித்துறை வீதி, கோப்பாய். | மகேந்தினி ஸ்ரோஸ் மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு. | சந்நிதி பாம் சென்ரர் பூதர்மட லேன், நீர்வேலி தெற்கு. | திரு. K. பரமானந்தராசா MPCS லேன், கோப்பாய் வடக்கு. |
| இராசதுரை முருகானந்தன் நீர்வேலி மேற்கு, நீர்வேலி. | மினோல்டா டிஜிட்டல் போட்டோ கோப்பாய் சந்தி, கோப்பாய். | திருமகள் பாமசி & குளோசறிஸ் கோப்பாய் சந்தி, கோப்பாய். | தேனுகா ஹாட்வேயர் கோப்பாய் சந்தி, கோப்பாய். |

# அல்கொய்தா மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்; சிதம்பரம் பதிலடி



(ஜம்மு)

அல் கொய்தா பயங்கரவாதி இலியாஸ் காஷ்மீரியன் மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

காஷ்மீர் மாநிலம் ஜம்முவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டு ஆலோசனைக்கூட்டத்தில் பங்கேற்றபோது செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது இலியாஸ் மிரட்டல் குறித்து கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

உலகக் கோப்பை கொக்கி போட்டி மற்றும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க வரும் வெளிநாட்டு வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் அதேபோல் டில்லியில் நடைபெறவுள்ள பொது நலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கும் முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்றார்.

ஹர்கத் உல் ஜெகாதி, இஸ்லாமி ஹுஜி ஆகிய அமைப்புக்களின் தலைவரும் அல் கொய்தா அமைப்பின் பாகிஸ்தான் தலைவருமான இலியாஸ் ஆசியன் டைம்ஸ் இணையத்தளம் மூலம் இந்தியாவுக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

அதில் இந்தியாவில் நடைபெறும் உலகக் கோப்பை கொக்கிப் போட்டி, ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி, பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் வெளிநாட்டு வீரர்கள் யாரும் பங்கேற்க வேண்டாம்.

அவ்வாறு பங்கேற்றால் அதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல. அதுபோல் இந்த விளையாட்டுப் போட்டிகளைப் பார்க்க ரசிகர்களும் செல்ல வேண்டாம்.

ஏனெனில் இந்தியா முழுவதும் நாங்கள் கடுமையான தாக்குதல் நடத்தவுள்ளோம் என்று அவர் மிரட்டியுள்ளார். (6)

# பயங்கரவாதிகளுக்காக வாதிடுவதால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது

## பாகிஸ்தான் வழக்கறிஞர்கள் தெரிவிப்பு

மும்பைத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் தரப்பில் வாதிடுவதால் எங்கள் உயிருக்கு ஆபத்துள்ளது. எனவே உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் வழக்கறிஞர்கள் கோரியுள்ளனர்.

மும்பைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 7 பேரை பாகிஸ்தான் அரசு கைது செய்து வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த வழக்கு லாகூரில் பயங்கரவாத வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தங்கள் உயிருக்கு ஆபத்துள்ளதால் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இந்தியப் பயங்கரவாதிகள் தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் லாகூர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதையடுத்து பயங்கரவாதிகளுக்காக ஆஜராகும் 5 வழக்கறிஞர்களுக்கும் பாதுகாப்பு அளிக்குமாறு நீதிபதி கவாஜா முகமது ஷரீப் உத்தரவிட்டார். ஆனால் இதுவரை ஒரு பொலிஸ்காரர் கூட பாதுகாப்புக்கு அளிக்கப்படவில்லை என்று லஷ்கர் இ தொய்பா தலைவர் ஜாகியுர் ரஹ்மான் லக்விக்காக வாதிடும் வழக்கறிஞர் சுல்தான் தெரிவித்தார்.

இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு என்பதால் எங்கள் உயிருக்கு ஆபத்துள்ளது. எனவே பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த வழக்கு விசாரணை ராவல்பிண்டியில் உள்ள அடியலா சிறையில் நடந்தது. ஆனால் அது பாதுகாப்பற்ற இடம் என்பதால் வழக்கு லாகூருக்கு மாற்றப்பட்டது. எனவே அரசு தரப்பு வழக்கறிஞர்களுக்கும் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)




தெற்கு ஆசியாவின் மிகப் பெரிய இராணுவ தளபாடங்கள் கண்காட்சி டில்லியில் நடைபெறுகிறது. 30 நாடுகளைச் சேர்ந்த 450 ஆயுத தயாரிப்பு நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

# இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தை அமெரிக்க நெருக்கடியால் நடத்தப்படுகிறது

## பா.ஜனதா தலைவர் நிதின் கட்காரி குற்றச்சாட்டு



(புதுடில்லி)

இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தை அமெரிக்காவின் நெருக்கடி காரணமாக நடத்தப்படுவதாக பா.ஜனதா தலைவர் நிதின் கட்காரி குற்றம்சாட்டியுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் பா.ஜனதா கட்சியின் 3 நாள் தேசிய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது.

முதல் நாள் கூட்டத்தில் கட்சித் தலைவர்களிடையே நிதின் கட்காரி பேசுகையில் கூறியதாவது;

கட்சியில் சாதாரண தொண்டர்களால் பிரச்சினை எதுவும் கிடையாது. தலைவர்களால்தான் பிரச்சினையே உருவாகிறது.

தலைவர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதை நிறுத்திவிட்டு கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டும்.

கட்சித் தொண்டர்களிடம் பெரிய மனதுடன் இணைந்து தலைவர்கள் செயற்பட வேண்டும். முதலில் நமக்கு கட்சிதான் முக்கியம். கடைசியாகத்தான் சொந்த நலன் இருக்கவேண்டும்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது அவர் கூறியதாவது; மும்பை மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது பாகிஸ்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பாகிஸ்தான் தலைவர்களுக்கு அவர்கள் நாட்டிலேயே எந்த மதிப்பும் மரியாதையும் கிடையாது. அப்படி இருக்கும்போது அவர்களுடன் எதற்காக இந்தியா அமைதிப் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று புரியவில்லை. அமெரிக்க அளிக்கும் நெருக்கடி காரணமாகத்தான் இந்தப் பேச்சுவார்த்தையே நடத்தப்படுகிறது.

மும்பை மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்காதவரை அந்த நாட்டுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தக்கூடாது.

நாட்டின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு பாகிஸ்தான், சீனா நாடுகளின் மீது சரியான வெளிநாட்டு கொள்கையை பின்பற்றவில்லை என்று மூத்த தலைவர் அத்வானி கூறியது சரியானதுதான்.

மத்திய அரசின் தவறான கொள்கை காரணத்தால்தான் காஷ்மீர் மீதான இந்தியாவின் பிடி பலவீனமாக உள்ளது. தவிர 1962ஆம் ஆண்டு சீனா ஏற்படுத்திய ரணம் இன்னும் மாறாமல் அப்படியே உள்ளது என்று நிதின் கட்காரி தெரிவித்தார். (6)

# பாரதச் செய்திகள்

# உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் அவசியம்

## மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் தெரிவிப்பு



(புதுடில்லி)

இந்தியாவின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய், நெல் உள்ளிட்ட பயிர்களை அறிமுகப் படுத்துவது அவசியம் என மத்திய விவசாயத் துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக அறிமுகம் செய்வதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

பூச்சிகளை கொல்லும் சக்தி வாய்ந்தது என்பதால் அந்தக் கத்தரிக்காயை நோய் தாக்காது. மேலும் அதிக விளைச்சல் கிடைக்கும் என விஞ்ஞானிகளும் பி.டி. கத்தரிக்காய் ஆதரவாளர்களும் கூறுகின்றனர். ஆனால் பூச்சிகளைக் கொல்லும் அளவுக்கு நஞ்சுத் தன்மை வாய்ந்த அந்த கத்தரிக்காயால் அதை உண்ணும் மனிதர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என இயற்கை ஆர்வலர்களும் விவசாயிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடுமையான எதிர்ப்புக் காரணமாக பி.டி. கத்தரிக்காய் அறிமுகம் செய்வதை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நிறுத்தி வைத்துள்ளது.

பி.டி. கத்தரிக்காயைத் தொடர்ந்து உருளைக் கிழங்கு, வெண்டைக்காய், நெல் உள்ளிட்ட வேறு பயிர்களும் மரபணு மாற்றம் செய்யப்பட்டு தயாராகவுள்ளன. இந்த சூழ்நிலையில் நாடு முழுவதும் உள்ள விவசாயப் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் இரண்டு நாள் மாநாடு டில்லியில் நேற்று முன்தினம் தொடங்கியது.

மாநாட்டை மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் தொடங்கி வைத்துப் பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது; நாட்டின் உணவு பாதுகாப்புப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க நான் விரும்புகின்றேன். மக்கள் தொகை இரண்டு மடங்கு அதிகரித்துவிட்டது. ஆனால் கூடுதல் விவசாய நிலங்களோ கூடுதல் நீர்வளமோ கிடையாது. இத்தகைய நிலைமையில் நம்முடைய வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. எனவே நவீன அறிவியல் தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் போன்றவற்றை விவசாயத்தில் அறிமுகம் செய்ய வேண்டும்.

நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மரபணு மாற்றம் செய்யப்பட்ட (பி.டி. வகை) பயிர்களைப் பயன்படுத்தலாம். மரபணு மாற்றப்பட்ட பயிர்கள், இந்தியாவுக்கு கட்டாயமாகத் தேவை. எனினும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எடுத்துள்ள முடிவை நாம் மதிக்க வேண்டும். நமக்கு உரிய வழிகாட்டுதலை அந்த அமைச்சகம் தான் தர முடியும்.

தற்போதைய முடிவை நம்முடைய முயற்சிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவாக கருதக் கூடாது. சவால்களை எதிர்கொள்வது அவசியம். வேளாண் துறையில் மாற்று தொழில்நுட்பங்கள் குறைவாக உள்ளன. மரபணு மாற்றப்பட்ட பயிர்களால் உற்பத்தி அதிகரிப்பு, குறைவான உற்பத்தி செலவு, பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு போன்ற பயன்கள் கிடைக்கும்.

கால்நடை தீவன உற்பத்தியில் இது போன்ற தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தபோது எதிர்ப்புக் கிளம்பியதை குறிப்பிடலாம். எனவே மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் குறித்து பொதுமக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள தவறான கருத்தை மாற்ற வேளாண் விஞ்ஞானிகள் முன்வர வேண்டும். முன்பைவிட இரண்டு மடங்கு வேகத்தில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (6)

# கடற்சாதாழைகளும் அவற்றின் முக்கியத்துவமும்

கடலில் இருந்து கிடைக்கும் ஒரேயொரு தாவர உணவாகிய கடற்சாதாழைகள் மா அல்கா வகையைச் சேர்ந்த ஆதியான பூக்காத் தாவரங்கள் ஆகும். கிழக்குத் தேசத்தவர் பல்லாயிரம் ஆண்டுகளாக இவற்றை உணவாக்கி வந்துள்ளனர்.

இத்தாவரங்கள் உப்புத்தன்மையான நீரில் அல்லது கடல் நீரில் வளர்கின்றன. இவை உண்மையான தண்டு, வேர் மற்றும் இலைகளையும் கொண்டிருப்பதில்லை. பதிலாக இலை போன்ற அமைப்பும் (Leaf-like) தண்டு வடிவ (Stipe) ஐயும் வேர்ப் போலியையும் (Holdfast) கொண்டுள்ளன. இவை வேர்ப்போலிகளின் உதவியினால் பாறைகள், முருகைகற்பாறைகள் என்பவற்றில் ஒட்டி வாழ்கின்றன. அத்துடன் கடல் நீரிலிருந்து சேதனப் பொருட்களை நேரடியாக அகத்துறிஞ்சி தனது வளர்ச்சிக்கும் விருத்திக்கும் பயன்படுத்துகின்றன.

தரைவாழ் தாவரங்களைப் போன்று கடற்சாதாழைகளும் குளோரோபில்லை ஒத்த ஒளித் தொகுப்பு நிறப்பொருட்களைக் கொண்டிருக்கின்றன. சூரிய ஒளியைப் பயன்படுத்தி காபனீரொட்சைட் வாயு, நீர் என்பனவற்றிலிருந்து உணவையும் ஒட்சிசன் வாயுவையும் உற்பத்தி செய்கின்றன. இதனால் இவை கடற்சூழலில் முதல் உற்பத்தியாளராக காணப்படுவதுடன் அவற்றுடன் இணைந்து வாழும் விலங்குகளின் சுவாசத்திற்கு வேண்டிய ஒட்சிசனையும் வழங்குகின்றன.

## கடற்சாதாழைகளின் வகைகளும் பரம்பலும்

கடற்சாதாழைகள் அவற்றின் நிறத்தை அடிப்படையாக வைத்து மூன்று பிரிவுகளுக்குள் அடக்கப்படுகின்றன. அத்துடன் அவற்றின் பரம்பலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவை கடலில் இடைவற்றுப் பெருக்கு வலயம் (Intertidal Zone) மற்றும் உபவற்றுப் பெருக்கு வலயத்திலும் (Subtidal Zone) பரந்துள்ளன.

1) பச்சை அல்கா (Green algae) இவை கடற்கரையோரமாக ஆழம் குறைந்த பகுதியில் உயர் இடைவற்றுப் பெருக்கு வலயத்தில் (Upper intetidal Zone) காணப்படும்.

உதாரணம் : *Entermorpha Caulerpa*




2) கபில அல்கா (Brown algae) இவை இடை - இடைவற்றுப் பெருக்கு வலயத்திலும் (Mid intertidal Zone), உபவற்றுப் பெருக்கு வலயத்திலும் (Subtidal Zone) காணப்படும்.

உதாரணம்: *Laminaria*




3) சிவப்பு அல்கா (Red algae) - இவை தாழ் இடைவற்றுப் பெருக்கு வலயத்திலும் (Lower intertidal Zone) கடலில் ஆழமான பகுதிகளிலும் காணப்படும்.

உதாரணம் :*Gracilaria*




| வகுப்புக்கள் | ஒளித்தொகுப்பு நிறப்பொருள் | உணவு சேமிப்பு | கலச்சுவர் கூறுகள் |
|---|---|---|---|
| 1. பச்சை அல்கா (Chlorophyta) | குளோரபில் a,b கரோற்றீனோயிட் | மாப்பொருள் | பல்சக்கரைட் செலுலோசு |
| 2. கபில அல்கா (Phaeophyta) | குளொரபில் a,c கரோற்றீனோயிட் | லமினாறின் எண்ணெய் | செலுகோசு அல்ஜின் |
| 3. சிவப்பு அல்கா (Rhod ophyta) | குளொரேபில் a,b கரோற்றீனோயிட் பைகோபிலின்ஸ் | மாப்பொருள் | செலுகோசு பெக்ரின்சேர்வைகள் |

*அட்டவணை - நிறம் (ஒளித்தொகுப்பு நிறப்பொருள்), உணவு சேமிப்பு கலச்சுவர் கூறுகளும்.*

அடர்த்தியாக வளரும் கடற்சாதாழைகள் சூழலியல் ரீதியில் ஏனைய நீர் வாழ் தாவர விலங்குகளுக்கு முக்கியம் வாய்ந்தவை ஆகும். இவை அவற்றிற்கு உகந்த சூழலையும் வாழ்விடத்தையும் ஆதாரத்தையும் அளிக்கின்றன. அத்துடன் விலங்குகளிற்கு உணவாகவும் பயன்படுகின்றன.

உதாரணம்: பச்சை கடல் முள்ளி (Green sea urchin), Periwinkles போன்றன கடற்சாதாழைகளை உணவாகப் பயன்படுத்துகின்றன.

கடற்சாதாழைகள் இறந்தழியும்போது அவை அதிகளவில் நுண்ணுயிரிகளாலும் முள்ளந்தண்டிலி விலங்குகளினாலும் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில் அயடீன், புரதம் ஆகியன அதிகளவில் காணப்படுவதுடன் இரும்பு, செப்பு, நாகம், செலினியம், புளொரைட், மங்கனீசு, போரன், நிக்கல், கோபோல்ற், சோடியம், கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம், குளோரீன், கந்தகம், பொசுபரசு போன்ற மூலகங்களும் காணப்படுகின்றன.

## பயன்பாடுகளும் முக்கியத்துவமும்

- பல நூற்றாண்டு காலமாக கடற்சாதாழைகள் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
- மருத்துவ மற்றும் கைத்தொழில் துறையில் அயடீன், பொட்டாசியம் மற்றும் கனியுப்புக்கள் பெறுவதற்கான மூலப்பொருளாக கடற்சாதாழைகள் பயன்படுத்தப்பட்டன. சீனர்கள் கி.மு. 3000 வருடங்களுக்கு முன்னரே இவற்றை மருத்துவ தேவைக்காகப் பயன்படுத்தியுள்ளனர். அயடீனை அதிகமாக கொண்டிருப்பதனால் கண்டக்கழலை நோயைக் குணப்படுத்தவும் உதவுகின்றது. (உதாரணம்: Asparagopsis toxiformis, Sarconema furcellatum) மருத்துவப் பயன்பாட்டில் கடற்சாதாழைகள் anticoagulants, antibiotics, antihelmenthes, anti-hypertensive agents, reducers of blood cholesterol and sugar, dilatory agents ஆகவும் பூச்சி கொல்லியாகவும் பயன்படுகிறது.
- இவை அதிகளவு புரதம் கொண்டிருப்பதனால் உணவாகவும் கால்நடை தீவனமாகவும் பயன்படுகிறது. ஜப்பானில் வருடாந்தம் நூறாயிரம் தொன்னுக்கு மேற்பட்ட கடற்சாதாழை உணவுகள் நொறி (Nori), கொம்பு (Kombu), வகமே (Wakame) ஆகிய வர்த்தகப் பெயர்களில் தயாரிக்கப்படுகிறது. கடற்சாதாழைகளில் உள்ள போசணைத் தன்மை நன்கு அறியப்பட்டதும் அவற்றின் பாவனை அதிகரித்துள்ளது.

உதாரணம் : Porphyra எனும் கடற்சாதாழைகளின் பாவனை ஜப்பான் சந்தையில் அதிகரித்துள்ளது.

- நீண்ட காலமாக கரையோர கிராமங்களில் வாழும் கால்நடைகள் இவற்றை உணவாகப் பயன்படுத்தின. தற்காலத்தில் இவற்றை பதனிட்டு விலங்குணவாக தயாரிக்கின்றனர்.

உதாரணம்: *Ascophyllum nodosum*

- அத்துடன் அவர்கள் கடற்சாதாழைகளை நேரடியாக உரமாகவும் பயன்படுத்தினர். தற்போது இவற்றிலிருந்து உரங்கள் தயாரிக்கப்படுகிறது. இவை தாவர வளர்ச்சியை ஒழுங்காக்கும் ஒட்சிசன், சைற்றோகைனின் போன்றவற்றைக் கொண்டிருக்கின்றன. உதாரணம் : Maerl எனும் உரம் சிவப்பு அல்காவிலிருந்து தயாரிக்கப்படுகின்றது.
- தற்போது கடற்சாதாழைகளிலிருந்து மட்டுமே கூழ்மப்பதார்த்தங்களான ஏகார், அல்ஜின், கராஜினன் என்பன தயாரிக்கப்படுகின்றது.
- கடற்சாதாழைகளிருந்து காற்றின்றிய நொதித்தல் செயற்பாட்டின் மூலம் மெதேன் வாயு உற்பத்தி செய்யப்படுகிறது.
- கடற்சாதாழைகளிலிருந்து உடல், கை, முகம் போன்றவற்றிற்கான அழகு சாதனப் பொருட்களை (Cream and Lotions) பெறப்படுகின்றது.

ஒருங்கிணைந்த நீரில் வளர்ப்பில் (Integrated aquqculture) மீன்களுடன் சேர்த்து கடற்சாதாழை வளர்க்கப்படுகிறது. இதன் போது இத்தாவரங்கள் மீன்களின் கழிவுப் பொருட்களை வளமாக்கிகளாகப் பயன்படுத்துகின்றன. அதேவேளை மீன்கள் அவற்றை உண்வாக்குகின்றன. இதனால் நீர் நிலைகளில் மீன்களினால் ஏற்படுத்தப்படும் மாசாக்கல் குறைக்கப்படுவதுடன் கடற்சாதாழைகளின் அளவுக்கதிகமான பெருக்கமும் மீன்களினால் குறைக்கப்படும்.

உதாரணம் : tilapia மீன் வளர்ப்பின் போது கடற்சாதாழையும் வளர்க்கப்படுகின்றது. (Enteromorpha)

- கழிவு நீர் சுத்திகரிப்பில் இவை பயன்படுத்தப்படுகின்றது. இதன்போது நீரில் கலந்துள்ள விவசாயக் கழிவுப் பொருட்களான நைதரசன், பொசுபரசு போன்றன இவற்றினால் பயன்படுத்தப்படுவதனால் நீரில் அவற்றினளவு குறைகிறது.
- கபில அல்காவிலிருந்து மனிற் றோல் (Mannitiol) தயாரிக்கப்படு கின்றது. இது வெடி பொருட்கள், வாணிஸ் தயாரிப்பில் பயன்படுகிறது.

அதிகரித்து வரும் கடற்சாதாழைகளின் தேவைகளுக்கேற்ப அதிகளவில் அவை அறுவடை செய்யப்படுகிறது. இதனால் அங்கு வாழும் தாவர விலங்கு சமுதாயங்களின் சமனிலை குழப்பப்படுவதுடன் கடலரிப்பும் அதிகரிக்கின்றது. அத்துடன் அவற்றை அறுவடை செய் யும் போது அவற்றின் சூழலில் ஏற்படும் பாதிப்பு கடற்சாதாழைகளின் நிலைத்தலுக்கும் விருத்திக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இந்தியா, இலங்கை கடற்பிரதேசங்களில் ஏறத்தாழ 720 கடற்சாதாழை இனங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 60 வகையான இனங்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை.

**செல்வி அஜந்தா ரூபசிங்கம்**
*செய்முறை காட்டுநர் மீன்பிடியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.*

1981ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறையைச் சேர்ந்த ஆறுமுகம் மற்றும் அவரது குழுவினரால் மண்டைதீவில் கரையோரங்களிலிருந்து பெறப்பட்ட சிவப்பு அல்காவிலிருந்து ஏகாரும், கபில அல்காவிலிருந்து அல்ஜினிக்கமிலமும் பிரித்தெடுக்கப்பட்டது.

எனவே கடற்சாதாழைகளிலிந்து ஏகார், அல்ஜினிக்கமிலம் போன்றவற்றை வர்த்தக ரீதியில் பிரித்தெடுப்பதன் மூலம் உள்நாட்டு வருமானம் அதிகரிக்கும். இதன் மூலம் எமது பிரதேச மக்கள் தொழில் வாய்ப்பு பெறுவதோடு அதிக வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இது எமது பிரதேச அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும்.

இதற்கு கடற்சாதாழைகள் பற்றிய அறிவும் அவற்றின் பிரித்தெடுப்பு முறை மற்றும் தொழில்நுட்ப வசதிகள் முக்கியமானவையாகும். அத்துடன் கடற்சாதாழைகளின் நீரில் வளர்ப்பும் முக்கியம் வாய்ந்ததாகும். எனவே கடற்சாதாழைகள் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் மக்களிடையே ஏற்பட வேண்டும்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 15

**பின்புறமாக நீந்தக்கூடிய மிகப்பெரிய முள்ளந்தண்டில்லாத விலங்கு எது?**

**விடைகளை 03-03-2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. V. Sendil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மீன்பிடியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைகழகம்.

**புதிர் 13க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

இராசகுமார் ஆருரன்
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

**புதிர் 14 இற்கான விடை : செதில்கள்**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 15

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
கையொப்பம் :..........................................

# அணுமின் உலைகள் கட்டுவதில் அமெரிக்கா கூடிய கவனம் செலுத்தவுள்ளது

(வோஷிங்டன்)

சுற்றுலாச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்கவும் புதிதாக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அணு மின் உலைகள் கட்டுவதிலும் தனது அரசு கூடுதல் கவனம் செலுத்தும் என்று அமெரிக்க அதிபர். பராக் ஒபாமா கூறினார். இதற்காக தென்கொரியா மற்றும் இதர நாடுகளின் வழிமுறைகளை அமெரிக்கா பின்பற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேரிலேண்ட் பகுதியில் உள்ள பயிற்சி மையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியதாவது,

ஜோர்ஜியாவின் பர்கி நகரில் இரு அணு மின் உலைகளைக் கட்டுவதற்கு அமெரிக்கா 8ஆயிரத்து 300 கோடி அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்கும். பல தலைமுறைகளாக அமெரிக்காவின் உதவியுடன் அணுமின் உலைகள் கட்டும் பணியில் ஈடுபட்டு வந்த தென்கொரியா தற்போது ஜப்பான் ,பிரான்ஸ்,நிறுவனங்களின் போட்டியைச் சமாளித்து ஐக்கிய அரபு எமிரேட்டில் 4 அணு மின் உலைகளை கட்டுவதற்கான 2 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் மதிப்பிலான ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளது.

எரிசக்தி துறையில் அமெரிக்காவின் போட்டியாளர்கள் புதிதாக வேலை வாய்ப்புகளை உருவாக்கி மேலாதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அணுமின் சக்தியும் இதற்கு விதிவிலக்கல்ல. அணுமின் சக்தி தொழிலில் ஜப்பானும், பிரான்சும் நீண்ட காலமாகவே அதிகளவில் முதலீடு செய்து வருகின்றன.

புதிதாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமல்லாது புதிய தொழில் நுட்பங்களை புகுத்துவதிலும் இந்த நாடுகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன.

அணுமின் சக்தி அல்லது சூரியனின் சக்தி அல்லது காற்றாலை மின் உற்பத்தி எதுவானாலும் வருங்காலத்தில் இதில் அதிக முதலீடு செய்ய அமெரிக்கா தவறினால் இத்தகைய தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றார்.(6)

# அமெரிக்காவில் ஒபாமா செல்வாக்கு சரிந்தது; மீண்டும் அதிபராக ஆதரவு இல்லை

(வோஷிங்டன்)



ஒபாமா அதிபரான நேரத்தில் அமெரிக் காவில் அவரது செல்வாக்கு உச்சத்தில் இருந்தது. ஜோன் கென்னடியை ஒப்பிட்டு அவரைப் புகழ்ந்து பேசினார்கள்.ஆனால் தற்போது அவருடைய செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாக சரிந்தபடி உள்ளது.

2008அதிபர் தேர்தலில் அவர் வெற்றி பெற்ற நேரத்தில் அமெரிக்கா பொருளாதாரம் சரிந்து கிடந்தது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. ஒபாமா இவற்றை யெல்லாம் சரி செய்து விடுவார் என எதிர்பார்த் தனர்.

ஆனால் ஒபாமாவால் அதை சரி செய்ய முடியவில்லை. அதிபராக ஒருவருடத்தைத் தாண்டி விட்ட நிலையிலும் போதிய முன் னேற்றம் இல்லாததால் மக்கள் ஒபாமாவுக்கு எதிராக திரும்பியுள்ளனர்.

இது தொடர்பாக சி.என்.எஸ்.டி.வி. நிறுவனம் ஒரு கருத்து கணிப்பு நடத்தியது.

954 வாக்காளர்கள் உள்ளிட்ட ஆயிரத்து 23 பேரிடம் இந்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. 2012ஆம் ஆண்டு நடக்கும் அதிபர் தேர்தலிலும் ஒபாமாவை ஆதரிப்பீர்களா? என்று அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்தவர்கள் 52சதவீதம் பேர் ஒபாமா அதிப ராக ஆதரவு கொடுக்க மாட்டோம் என்றனர். 44 சதவீதம் பேர் மட்டும் அவரை ஆதரிப்போம் என்றனர்

ஆனால் ஒபாமாவின் ஒட்டுமொத்த பணிகள் நன்றாக இருப்பதாக 47.8 சதவீதத்தினரும் சரி இல்லை என்றும் 45.9 சதவீதத் தினரும் கூறியுள்ளனர். (6)

# தலிபான்களின் மூத்த தளபதி கைதானதை பாகிஸ்தான் உறுதிப்படுத்தியுள்ளது

ஆப்கானிய தலிபான்களின் மூத்த தளபதியான முல்லா அப்துல் கனி பராதார் கடந்த வாரம் கராச்சியில் பிடிபட்டுள்ளார் என்பதை பாகிஸ்தான் அரசாங்கம் தற்போது உறுதி செய்துள்ளது.

நடவடிக் கையில் அவர் பிடிபட்டாரா என்று கூறவும் அவர் மறுத்துள்ளார்.

பராதார் பிடிபட்ட செய்தி முதலில் அமெரிக்காவில் தான் வெளியானது. ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் பாகிஸ் தான் தலையிடு




பராதார் கைது மிக முக்கியமானது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரைஷி தெரிவித்துள்ளார். பிற விபரங்கள் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை.

பாகிஸ்தான் அமெரிக்க கூட்டுப் படை

கிறது என்பது போன்ற செய் திகள் வெளிவந்தால் அது அப்பிராந்தியத்தில் உணர்வலைகளை தூண்டிவிடும் என்பதால் பராதார் பிடிபட்ட செய்தியை பாகிஸ்தான் ஊட கங்கள் உடனடியாக வெளியிடவில்லை என செய்தியாளர்கள் கூறுகின்றனர். (6)

# பாலஸ்தீனர்களின் வாழ்க்கையை மோசமாக்கும் நடவடிக்கைகளில் இஸ்ரேல்

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் குற்றச்சாட்டு

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் பாலஸ்தீனர்களின் வாழ்க்கையை மிகவும் மோசமாக்கும் நடவடிக்கைகளில் இஸ்ரேல் தொடர்ச்சியாக ஈடுபடுவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

இஸ்ரேலிய கொள்கையை மிகவும் கடுமையாக விமர்சிக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையில் சுமூகமான வாழ்க் கையை வாழ்வது என்பது பல பாலஸ்தீனர்களுக்கு அங்கு முடியாத காரியமாகிவிட்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளது.

அடிக்கடி அவர்களால் பள்ளிக்கூடங்களுக்கு, வேலைக்கு மற்றும் மருத்துவமனைகளுக்கு செல்ல முடியாது நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் பாலஸ்தீன விவசாயிகளுக்கு வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் 50 வீதத்துக்கும் அதிகமானோர் வறுமையில் சிக்கியுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிக்கிறது.

இஸ்ரேலுக்கு பாதுகாப்பு கரிசனைகள் இருக்கின்ற போதிலும் அதற்கும் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை பேணுவதற்கும் இடையில் ஒரு சமநிலை பேணப்பட வேண்டும் என்றும் செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது. (6)



நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஹெயிட்டி தீவிற்கு ஒருநாள் சுற்றுப் பயணமாக சென்ற பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோஸி (வலது) ஹெயிட்டி அதிபர் ரேனே பிரேவல் அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# சுற்றுலா ‘விசா’வில் வருவோரை கண்காணிக்க மலேசியா முடிவு

(கோலாலம்பூர்)

மலேசியாவுக்கு வரும் வெளிநாட்டவர்களை அவர்கள் நாட்டை விட்டு செல்லும் வரை தொடர்ந்து கண்காணிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

மலேசியாவுக்கு சுற்றுலா விசாவில் வரும் வெளிநாட்டினர் பலர் அங்கு தங்கி பல்வேறு தொழிலை செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் விசா காலம் முடிந்த பிறகும் தங்கியிருந்த 47 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து மலேசிய உள்துறை அமைச்சர் ஹிஷாமுதீன் குறிப்பிடுகையில், சுற்றுலா விசாவில் வரும் வெளிநாட்டவர்கள் இங்கேயே தொழில் செய்து கொண்டு நீண்ட காலம் தங்கி விடுகின்றனர். இதனால் சமூக பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதனால் நாட்டின் மதிப்பு பாதிக்கப்படுவதோடு உண்மையான சுற்றுலா பயணிகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். மலேசியாவுக்கு வரும் வெளிநாட்டினர் நாட்டை விட்டு வெளியேறும் வரை அவர்களை கண்காணிக்கும் நடைமுறையை உருவாக்க உள்ளோம் .இது குறித்து விரைவில் அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது என தெரிவித்துள்ளார். (6)



கிரீஸ் நாட்டின் ஈவ்ரஸ் நகர் பகுதியில் பெய்த பலத்த மழையால் ஆற்றின் கரை உடைந்து நகருக்குள் வெள்ளம் புகுந்தது. ஏராளமான வீடுகளை நீர் சூழ்ந்தது. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க மீட்புக்குழுவினர் படகில் விரைந்தனர்.

# அழகிய குடிமக்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கு முதலிடம்

(லண்டன்)

அழகிய குடிமக்களைக் கொண்ட உலக நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 8ஆவது இடம் கிடைத்துள்ளது. முதலிடத்தில் அமெரிக்கா உள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த இணையதளம் ஒன்போல் டாட் காம் அதன் சார்பில் அழகிய மக்களைக் கொண்ட டாப் 20 உலக நாடுகளை வரிசைப்படுத்துமாறு கேட்கப்பட்டது. அதற்கு சுமார் 5 ஆயிரம் இங்கிலாந்து மக்கள் பதிலளித்தனர்.

அதன் அடிப்படையில் முதல் 20நாடுகளின் பட்டியல் வெளி யிடப்பட்டுள்ளது. அதன்படி சர்வதேச திரை உலகமான ஹொலிவுட்டை மையமாகக் கொண்ட அமெரிக்காவில் அழகானவர்கள் அதிகம் என்று கூறப்பட்டது. ஏஞ்சலினா ஜோலி உட்பட அழகிகளைக் கொண்ட அதற்கு முதலிடம் கிடைத்தது. பிரேசில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. பினலோப் குரூஸ் உட்பட ஹொலிவுட் திரையுலகுக்கு பல அழகிய நடிகைகளத் தந்துள்ள ஸ்பெயின் மூன்றாம் இடம்பெற்றது. அழகில் அவுஸ்திரெலியர்களுக்கு நான்காம் இடமும், இத்தாலியின் கவர்ச் சிகரமான பெண்களுக்காக ஐந்தாவது இடமும் கிடைத்தன.

சுவீடன், இங்கிலாந்து ஆகிய நாட்டினரின் அழகுக் உலக அளவில் 6 மற்றும் 7ஆவது இடங்கள் அளிக்கப்பட்டன. ஐஸ்வர்யா ராய, பிபாஷா பாசு, கரீனா கபூர், காத்ரீனா கைப் உட்பட பொலிவுட் அழகினைக் கொண்ட இந்தியாவுக்கு பட்டியலில் 8ஆவது கிடைத்துள்ளது.

பிரான்ஸ், கனடா நாட்டு மக்கள் அழகில் 9,10 ஆவது இடத்தைப் பிடித்தனர். முதல் 20 நாடுகளின் பட்டியலில் மீதமுள்ள 10 இடங்களை போர்த்துக்கல், ஜப்பான், ஹாலந்து, ஜெர்மனி, மெக்சிகோ, வேல்ஸ் ரஷ்யா, அயர்லாந்து, ஆர்ஜென்டினா, ஸ்கர்லாந்து, ஆகியவை பெற்றன. இணைய தள செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ஜெசிகா, அல்பா, ஜெனீபர், அனிஸ்டன், பிராட் பிட் போன்ற பிரபலங்களால் அழகில் அமெரிக்கா முதலிடம் பிடித்தது.

ஆசிய நாடுகளில் இந்தியர்கள் அதிக ஓட்டுகளைப் பெற்று முதல் 10 இடங்களின் பட்டியலில் இடம்பெற்றனர் என்றார். (6)

அயலானுடைய கால் ஒடிந்த பிறகுதான் மிக நன்றாக நடக்கலாம் என்று பொறாமைக்காரன் நினைக்கிறான். - டென்மார்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## 'ஜனநாயக சர்வாதிகாரம்' புதிய ஆட்சிமுறை அறிமுகமாகும்

இலங்கையின் அரசியல் யாப்புகள் நாட்டின் பொது நன்மை கருதி ஆக்கப்பட்டவை அல்ல. அவை, சிங்களப் பெரும்பான்மை இனத்தின் நலன் கருதி இயற்றப்பட்டவை.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியை அறிமுகம் செய்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் முழுநோக்கமும் சிறுபான்மைத் தமிழர்களை அப்படியே அமிழ்த்திவிடுவதாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய போது அதனை அன்றைய அரசியல் புத்திஜீவிகளும், பௌத்த பீடங்களும் எதிர்த்திருக்குமாயின் நிலைமை இந்தளவு தூரத்திற்கு மாறியிராது என்பது உண்மை.

அன்று சிறுபான்மைத் தமிழர்களை இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக்குவதற்கு எடுத்த முயற்சியை வரவேற்றவர்கள் இப்போது அதன் பாதிப்பை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டுமென ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி ஆட்சிமுறையை கொண்டு வந்த போது அதனை வரவேற்று தலையசைத்தவர்களில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர்.

ஆனால் இன்று ஜனாதிபதி ஆட்சி முறை தவறானது, எங்கள் நாட்டிற்குப் பொருத்தமற்றதென்ற முடிபுக்கு ரணில் விக்கிரமசிங்க ஆளாகியுள்ளார்.

இதிலிருந்து ஜனாதிபதி ஆட்சி தமிழர்களை மட்டுமல்ல; சிங்கள மக்களையும் பாதித்து விட்டதென்பது நிரூபணமாகியுள்ளது.

தமிழ் மக்களுக்கு பாதகமாக அமையும் என்ற நம்பிக்கையோடு கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் இலங்கையில் சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்த்தியுள்ளது.


இந்நிலைமை மேலும் மோசமடையும் வாய்ப்பு உள்ளதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இதற்கான அறிகுறிகள் பலவற்றை நாம் காணமுடியும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிக்கும் பலம் நாடாளுமன்றத்திற்கு இருந்தாலும் நாடாளுமன்றத்தின் பலம் ஒன்றுபடாதென்ற நிஜத்தின் அடிப்படையில், இலங்கை ஜனநாயகம் ஆங்காங்கே சிந்திக்கிடக்கும் சர்வாதிகார ஆட்சிகொண்ட நாடாகவே எதிர்காலத்தில் இருக்கும்.

# பிக்குமாரின் கூட்டமொன்றை நடத்த முடியாதளவிற்கு நாட்டின் ஜனநாயகம் சீர்கெட்டுள்ளது

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

மாநாயக்க தேரர்களுக்கு பிக்குமாரின் கூட்டமொன்றை நடத்த முடியாதளவிற்கு நாட்டின் ஜனநாயகம் சீர்கெட்டுள்ளதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பெலவத்தையிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் கூறியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பொதுத் தீர்மானமொன்றை எடுப்பதற்காக கண்டியில் மாநாயக்க தேரர்கள் கூட்டமொன்றை நடத்தத் தீர்மானித்திருந்தனர். இறுதியில் அதனை ஒத்திவைக்க நேர்ந்துள்ளது.

இலங்கையில் பௌத்த பிக்குகளின் கூட்டத்தை நடத்த முடியாது எனில் நாட்டின் ஜனநாயகத்தின் நிலைமை தெளிவாகிறது.

இந்தக் கூட்டத்தை ஒத்திவைத்து மாநாயக்க தேரர்கள் விடுத்திருந்த அறிக்கையின் மூலம் நாட்டின் சிறந்த நிர்வாகம் காணப்படவில்லை என்பதும் தெளிவாகியுள்ளது.

நாட்டில் காணப்படும் சூழ்நிலையின் அடிப்படையில் பௌத்த தேரர்கள் பௌத்த மக்களின் பாதுகாப்பு மற்றும் தலதாமாளிகையின் கௌரவம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கூட்டத்தை ஒத்திவைப்பதாக மாநாயக்க தேரர்கள் கூறியிருந்தனர்.

மக்களினதும் பௌத்த பிக்குகளினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருப்பது இந்த அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் ஒழிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த அச்சுறுத்தலுக்கு அரசாங்கமே பொறுப்புகூற வேண்டும் என ஜே. வி.பியின் பொதுச் செயலாளர் மேலும் கூறியுள்ளார். (6)

## எம்.பி.க்களின் பாதுகாப்பு நீக்கம் தொடர்பில் கருத்து எதுவும் கேட்கப்படவில்லை

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு


(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு நீக்கம் தொடர்பில் தம்மிடம் கருத்து எதுவும் கேட்கப்படவில்லை என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தகவல் வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு நீக்கம் தொடர்பில் காவல்துறை மா அதிபரோ அல்லது வேறும் அரசாங்க அதிகாரிகளோ ஆலோசனை கேட்கவில்லை என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு நீக்கம் தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு நீக்கம் தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதாக காவல்துறைமா அதிபர் தெரிவித்துள்ள கருத்து உண்மைக்குப் புறம்பானது என அவர் தெரிவித்துள்ளார். (6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விநாயகர் சதுர்த்தி பூசைக்கு உகந்த இலைகள்

சிவனது பூசைக்கு செய்யப்படும் அனைத்து இலைகளும் விநாயகரின் பூசைக்கு உகந்தாக இருக்கிறது. வில்வம், அறுகம்புல், கரிசலாங்கண்ணி, ஊமத்தை, துளசி, நாயுருவி, வன்னியிலை, செண்பகம், இலந்தை, மாதுளை, மரிக்கொழுந்து, ஜாதிமல்லி, வெள்ளெருக்கு ஆகியவை விநாயகர் சதுர்த்தி பூசைக்கு உகந்த இலைகளாகும்.

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 111

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஒரு நாளில் நாம் செய்ய வேண்டிய நல்ல காரியம் வழிபாடாகும். நாளின் தொடக்கத்திலும் முடிவிலும் வழிபாடு செய்வது நல்லது. எமது முதற்சிந்தனை இறை சிந்தனையாக் இருந்தால் மனம் தெளிவோடிருக்கும் .எமது செயற்பாடுகளில் சீர்மை இருக்கும். இதனை நன்குணர்ந்த நமது முன்னோர் வழிபாட்டிற்கென நேரத்தைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். "காலையும் மாலையும் கடவுளை வணங்கு" என எல்லோரையும் வழிப்படுத்தியுள்ளனர்.

வழிபாடு செய்யும் வேளையைச் சம்பந்தர் தனது பதிகத்திலே குறிப்பிட்டுள்ளார். திருக்கோயிலுக்கு மாலையிலும் நண்பகலிலும் வழிபாடு செய்வதற்குச் செல்லும் அடியவர்களின் நிலையைப் பாடலிலே காட்டியுள்ளார். அடியார்கள் இறைவனுடைய பேரையும் ஊரையும் செல்வச் சிறப்பையும் பற்றிப் பேசும் காட்சி அவருடைய கண்களிலே பட்டது. அவ்வாறு பேசுபவர்களை "வல்ல தொண்டர்கள்" எனப் பெயரிட்டு அழைத்துள்ளார். நில உலகத்துத் தொண்டர்கள் மட்டு மன்றி விண்ணுலகத்தவரும் கைதொழும் இறைவன் பெருமையை எல்லோருக்கும் எடுத்துரைக்கின்றார். "பாரும் விண்ணும் கை தொழ" வீற்றிருக்கும் திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கும் அவருடைய எண்ணத்திலே வழிபாடு பற்றிய தெளிவை மக்களுக்கு நன்குணர்த்த வேண்டும் என்ற இலக்கு இருந்தது. கோயில் கோயிலாகச் சென்று மக்கள் கூட்டத்தை வழிபாடு செய்யத் தூண்டுகிறார்.

" கைதொழுதல்" என்பது வேறு கதி எனக்கில்லை என்ற உணர் வோடு கைகளைத் தலைமேல் வைத்து இறைவனை வணங்குதல். இதனைத் திருநாவுக்கரசர் மேலும் விளக்கமாக் கூறியுள்ளார்.

"தொழுது அகம் குழைய மேவித் தோட்டிமையுடைய தொண்டர்" தொழுவார் துயத் தீர்ப்பவன் இறைவன். விண்ணோர்களே தமக்கு இடுக்கண் ஏற்பட்ட போதெல்லாம் எமக்கு நீயே கதியென வழிபட்ட தேவர்களின் பண்பை மக்களுக்குக் கூறுகின்றார். இந்த உலகத்தவரும் விண்ணுலகத்தவரும் வழிபட்டுப்பயன்பெறும் இறைவன் பெருமையை எல்லோரும் அறிய வேண்டுமெனச் சம்பந்தர் பாடிய பாடல்கள் இன்று வரை நிலைத்திருப்பதற்கு இதுவே காரணமாகும்.

இறைவன் தோற்றத்திலே அவன் சடையிலே தாங்கியுள்ள கங்கையைப் பற்றிப் பல குறிப்புகள் உள. கங்கை சேர் சடை, கங்கை தங்கியசடை, கங்கை நீர் சடை, கறங்கை பொங்குசடை, கங்கையார் சடை, கங்கைவார்சடை, கங்கையோர் வார் சடை என வரும் குறிப்புகள் இதற்குச் சான்றாக உள்ளன. பாயுங்கங்கை தாங்கிய செஞ்சடை திருவானைக் காவில் வீற்றிருக்கும் இறைவனின் தோற்றம் புதிய பொலிவுடன் தோன்ற வழி செய்துள்ளது. நீர்வளம் மக்கள் வாழ்வியலுக்கு மிகவும் இன்றியமையாதது. நீரின்மையாது உலகு என வள்ளுவரும் கூறியுள்ளார். திருவானைக்கா தலம் சேர்ந்து வழிபாடு செய்யும் போது நீர்வளம் பற்றிய சிந்தனை ஏற்படும்.

அடியார்கள் பெருமையாய்ப் பேசும் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருவானைக்காத் தலம் ஒரு சிறந்த வழிபாட்டுத் தலமாக அமைந்துள்ளது. அங்கு நேரே சென்று வழிபட முடியாதவர் சம்பந்தருடைய பாடலைப் படிக்கும் போது அந்தத்திருத் தலத்திற்குச் செல்லவேண்டும் என்ற ஆவல் ஏற்படும்.

"குருமாலை நண்பகற் கூடி வல்ல தொண்டர்கள்
பேரும் ஊரும் செல்வமும் பேச நின்ற பெற்றியான்
பாரும் விண்ணும் கைதொழப் பாயுங்கங்கை செஞ்சடை
ஆர நீரொடேந்தினானைக் காவு சேர்மினே"

# கணனி மூலம் திரிபுபடுத்தப்பட்டதாக கூறப்பட்ட குற்றச்சாட்டை மனுவில் சேர்க்காதது ஏன் ?

## அமைச்சா லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் கணனி மூலம் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டும் எதிர்க்கட்சிகள், உச்சநீதிமன்றத்திற்கு தாக்கல் செய்துள்ள தேர்தல் முடிவுகளுக்கு எதிரான மனுவில் அதனைக் குறிப்பிடாதது தேன் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் இது குறித்து தெரிவித்த அமைச்சர், நாட்டு மக்களும் சர்வதேசமும் நீதியானதென ஏற்றுக் கொண்ட தேர்தலை மோசடி என்று கூறுபவர்கள் பொதுத் தேர்தலில் இதைவிட மோசமான படுதோல்வியைச் சந்திப்பது நிச்சயமெனவும் குறிப்பிட்டார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த தேர்தல் நீதியானதென ஐரோப்பிய ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. அதற்கான சான்றிதழையும் வழங்கியுள்ளது. தேர்தல் வாக்களிப்பு முடிவடைந்த அன்றைய தினம் 4 மணிக்கு அத்தேர்தல் நீதியானதும் அமைதியுமானதுமெனக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

எனினும், தேர்தல்முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் அவருடன் இணைந்திருந்த ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க கணனி மோசடியொன்று இடம்பெற்றதாகக் குறிப்பிட்டார். நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ள மனுவில் அரசவளங்கள் உபயோகப் படுத்தப்பட்டதாகவும் மேலும் சில குற்றச்சாட்டுக்களையும் குறிப்பிட்டுள்ளவர்கள் ஏன் கணனி மோசடி என்பதைக் குறிப்பிடவில்லை. இதன்மூலம் அடுத்துவரும் தேர்தலுக்கான சூழ்ச்சிகளை இப்போதிருந்தே ஆரம்பித்துள்ளமையே தெளிவாகிறது.



வீண் பிரசாரங்களை விட்டுவிட்டு நியாயமான அத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளுமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுநலவாய அமைப்பின் கூற்று தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கின்றதே என செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், ஐரோப்பிய ஆணைக் குழு போன்ற பிரசித்தி பெற்ற அமைப்புக்கள் நியாயமான தேர்தல் என குறிப்படும் போது சில அமைப்புக்கள் சில சக்திகளுக்கு சார்பாக அதற்கெதிரான கூற் றுக்களைத் தெரிவிப்பதை நாம் பெரிது படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 150 ஆசனங்களைப் பெற்று அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வந்து நல்லாட்சியொன்றை அமைக்க முற்படும் அரசாங்கத்துக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6)

# தேர்தலையும் , சம்பளத்தையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு செயற்படக்கூடாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தலையும், சம்பளத்தையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் செயற்படக்கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நலனையும், பொதுமக்களின் நலனையும் அடிப்படையாகக் கொண்டு அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறைந்த வருமானமுடைய மக்களுக்கு வீடமைப்பு திட்டங்களை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வருமானமுடைய சேரிகளில் வசித்து வரும் மக்களுக்கு வீடமைப்பு மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கைகள் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கப் படும் என அவர் தெரிவித்துள்ளார். (6)

# நந்தன குணதிலக சுதந்திரக் கட்சியில் இணைந்தார்

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் பொதுச் செயலாளர் நந்தன குணதிலக மஹிந்தராஜபக்ஷ தலைமையிலான சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தரப்புடன் இணைந்து இயங்கிவரும் விமல்வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திரமுன்னணியில் ஏற்பட்ட விரிசல்களை தொடர்ந்து குணதிலக சுதந்திரக்கட்சியில் இணைந்துள்ளார்.

இதனிடையே தமது கட்சியில் இணைந்துள்ள குணதிலக களுத்துறை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# பொதுத் தேர்தலையொட்டி பொலிஸாரின் விடுமுறைகள் ரத்து

(கொழும்பு)

தேர்தல் கடமைகளை மேற்கொள்ளவென பொலிஸ் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அனைவரினதும் விடுமுறைகள் நாளை முதல் தேர்தல் தினம் வரை ரத்துச் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல்மாதம் 8ஆம் திகதி இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காகவும் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துவதற்காகவும் இந்த நடைமுறையைப் பின்பற்றுவதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (6)

# எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் முறியடிப்பதற்கு கூட்டுத் தொழிற்சங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்புப் பேரணிகளையும் மோதல்கள் அற்ற முறையில் முறியடிப்பதற்கு கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் சதிகளை முறியடிக்கும் வகையில் நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள மக்களின் பங்களிப்புடன் பாரிய எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தவும் இதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐ.ம.சு.மு. மற்றும் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உதவிகளை பெற்றுக்கொள்வதெனவும் கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கூட்டம் பம்பலப்பிட்டியிலுள்ள மேல்மாகாண ஆளுநரின் பணி மனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய ஆளுநர் அலவி மௌலான கூறியதாவது, ஜனாதிபதித் தேர்தலின் மூலம் இந்த நாட்டு மக்கள் ஈட்டிய வெற்றியை முறியடிக்க தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் எடுக்கப்படும் முயற்சிகளைத் தோற்கடிக்க தொழிலாளர் வர்க்கத்தினர் தயாராகவுள்ளனர்.

தமது குறுகிய அரசியல் இலாபத்திற்காக மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் சில முன்னெடுத்து வரும் சட்டவிரோத ஆர்ப்பாட்டம் தொடர்பில் மக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

மனித படுகொலைகள் மூலமும் இரத்தக் களரிகள் மூலமும் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்த ஜே.வி.பியினரின் தூண்டுதல்களின் மூலமே பொன்சேகாவும் சதித்திட்டங்களை தீட்டியுள்ளார். இதனை மக்கள் நம்பப் போவதில்லை.

மக்கள் ஈட்டிய வெற்றியை நிர்மூலமாக்குவதற்கு இனியும் இந்த நாட்டு மக்களும் தொழிலாளர் வர்க்கத்தினரும் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

சுவரொட்டிகள் மூலம் நாட்டில் புரட்சியை ஏற்படுத்த பலர் முனைகின்றனர். ஆர்ப்பாட்டத்தின் மூலம்குழப்பங்களை விளைவித்து அது தமக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது என புகைப்படங்கள் எடுத்து வெளிநாடுகளுக்கு காண்பிக்க முயற்சிக்கின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (6)

# ஹெரோயின் போதைப் பொருளுடன் பாகிஸ்தானியர் ஒருவர் கைது

(கொழும்பு)

ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருளுடன் பாகிஸ்தானியர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கட்டார் நாட்டின் தோஹாவிலிருந்து இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குறிப்பிட்ட சந்தேக நபரைச் சோதனைக்குட்படுத்தியபோதே அவரின் மேலங்கியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 938 கிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சந்தேக நபர் தற்போது தடுத்துவைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (6)

# மாத்தறையில் போலிநாணயத்தாள்கள் அச்சிட்ட ஒருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களை அச்சிட்டதாகக் கூறப்படும் ஒருவர் மாத்தறை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபா மற்றும் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தவிர போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படத்தப்பட்ட கணனி உள்ளிட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வெலிகம வெலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளுக்காக குறித்த நபரை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (6-4)

# மனித உரிமை மீறல் குறித்து —மியன்மார் சிறையில்— ஐ.நா.பிரதிநிதி விசாரணை

(யாங்கூன்)

மியான்மாரில் முக்கிய அரசியல் தலைவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறையில் மனித உரிமை மீறப்படுகிறதா என்பதை ஐ.நா. சிறப்புப் பிரதிநிதி தோமஸ் ஓஜியா குயின்தானா நேரில் விசாரித்தார்.

பங்களாதேஷின் எல்லையை ஒட்டியுள்ள ராகின் பகுதியில் அமைந்துள்ள் சிறைச்சாலைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற அவர் சிறைச்சாலையில் கைதிகள் நடத்தப் படும் விதத்தை பார்வையிட்டார்.

பின்னர் அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ள முக்கிய அரசியல் தலைவர்கள் 4 பேரை சந்தித்துப் பேசினார். அப்போது அவர்கள் சிறையில் நடத்தப்படும் விதம் குறித்துக் கேட்டறிந்தார். (6)


# ஜே.வி.பி.கிண்ணம்சின்னத்தில் போட்டியிடத் தீர்மானம் ?

இதுவரை காலமும் மணி சின்னத்தில் போட்டியிட்டுவந்த மக்கள் விடுதலை முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிண்ணம் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜெனரல் சரத்பொன்சேகாவை முதன்மைப்படுத்தியதாக புதிய கட்சியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6)

## ஹர்பஜன் சிங், மிஷ்ரா சுழல் ஜாலம்

# 2-வது டெஸ்டில் இன்னிங்ஸால் வென்ற இந்திய அணி தொடரைச் சமன் செய்தது



(கொல்கத்தா)

ஹர்பஜன் சிங்-அமித் மிஷ்ரா ஜோடியின் சுழல் பந்து வீச்சு கைகொடுக்க இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுத் தொடரை 1:1என்ற கணக்கில் சமநிலை செய்தது.

ஹசிம் அம்லா சதம் அடித்து இறுதி வரை போராடிய போதும் தென்னாபிரிக்க அணி தோல்வியைச் சந்தித்தது. இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த நிலையில் தீர்க்கமான 2-வதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 14 ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 296 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 643 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 347 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன் தினம் 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 115 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் 5-வதும் இறுதி நாளான நேற்றுத் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி தற்காப்பு ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இதில் பிறின்ஸ் 23, டி வில்லியஸ் 3, டுமினி 6 ஓட்டங்களுடனும் ஸ்ரையன் ஒரு ஓட்டத்தையும் எடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 78 ஓவர்களில் 180 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்தது.

ஒரு முனையில் விக்கெட்டுக்க்ள் சரிந்த போதும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஹசிம் அம்லா அரைச் சதம் கடந்து நம்பிக்கையளித்தார்.

இந் நிலையில் 8-வது விக்கெட்டுக்காக அம்லாவுடன் இணைந்த பார்னல் நிதானமாகத் துடுப்பெடுத்தாட தென்னாபிரிக்க அணி சரிவிலிருந்து நிமிர்ந்தது.

இந்த ஜோடியின் தற்காப்பு ஆட்டத்தை தகர்க்க இந்திய அணித் தலைவர் தோனி பல வியூகங்கள் வகுத்தும் பலனளிக்காமல் போனது. இதில் ஹசிம் அம்லா 268-வது பந்தில் தனது 10-வது டெஸ்ட் சதத்தையும் இத் தொடரில் 3-வது சதத்தையும் பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த ஜோடி 8-வது விக்கெட்டுக்காக 24.2 ஓவர்களில் 70 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது பார்னல் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


அடுத்துக் களமிறங்கிய ஹரிஸ் 4, மோர்கல் 12 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்கத் தென்னாபிரிக்க அணி 131.3 ஓவர்களில் 290 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து இன்னிங்ஸ் மற்றும் 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இப்போட்டி நிறைவடைவதற்கு 19 நிமிடங்கள் இருந்த நிலையில் கடைசி விக்கெட்டை இழந்ததுடன் இறுதி விக்கெட்டுக்காக அம்லா-மோர்கல் ஜோடி 76 நிமிடங்கள் நிலைத்து



நின்று இந்திய அணியைப் போராட வைத்தமை சிறப்பு. இதில் ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 394 பந்துகளில் (16 பவுண்டரிகள் உட்பட) 123 ஓட்டங்களை எடுத்துத் தனி நபராக அசத்தினார்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 48.3 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட



59 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் அமித் மிஷ்ரா 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.



இப் போட்டியில் இரு இன்னிங்ஸுகளிலும் சதம் அடித்து அசத்தின தென்னாபிரிக்க அணியின் ஹசிம் அம்லா ஆட்ட நாயகனாகத் தெரிவானதுடன் தொடரில் ஒரு இரட்டைச் சதத்தையும் 2 சதங்களும் அடித்தமையால் தொடர் நாயகன் விருதும் அவருக்கே வழங்கப்பட்டது.இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலை செய்து சொந்தமண்ணில் கௌரவமடைந்தது.



### ஐ.சி.சி.தர வரிசையில் இந்தியா தொடர்ந்தும் நம்பர்-1

இப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலை செய்து இந்திய அணி ஐ.சி.சி. சிறந்த டெஸ்ட் அணிகள் தரவரிசையில் 124 புள்ளிகளுடன் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

தென்னாபிரிக்கா 120 புள்ளிகளுடன் தொடர்ந்தும் 2 ஆம் இடத்தில் உள்ளது. இதன் மூலம் இந்திய அணி ஐ.சி.சியின் டெஸ்ட் சம்பியன்ஸ் அந்தஸ்தை தனதாக்கிக் கொண்டு 85 இலட்சம் ரூபாய் பணப் பரிசினையும் பெற்றுக் கொள்ளவுள்ளது.

# வகுப்பறைக் கட்டடத் தொகுதிகளின் திறப்பு விழா நிகழ்வுகளின் தொகுப்பு

## நூல்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்கான நூல்கள் வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங் கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பாடசாலை அதிபர்களிடம் நூல்களைக் கையளிக்கவுள்ளார். (ச-5)

## இடம் பெயர்ந்த மக்களின் பொருட்கள் களவாடப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வன்னியில் மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களின் பொருட்கள் களவாடப்படுவதாக யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினர் கிளிநொச்சி அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். அதன் கௌரவதலைவர்சீ.வீ.கே.சிவஞானம் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்படிவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுயலாப அரசியல் தலைமைகள்...

மக்களிடம் ஆணை கேட்டு வரப்போகிறார்கள் என ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கடந்து போன பல்வேறு காலச் சூழல்களின் போது தமக்கு வாக்களித்து மக்கள் ஆணையை வழங்கினால் தாம் மக்களது உரிமைகளை பெற்றுத்தருவோம் என்று வாக்குறுதி கொடுத்த சுயலாப அரசியல் தலைமைகள் எவையும் வாக்குறுதி கொடுத்தபடி எமது மக்களுக்கான உரிமைகளுக்காக பேரம் பேசும் அரசியலுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

இவ்வாறு தங்களது பதவி நாற்காலிகளில் இவர்கள் உல்லாசமான உட்கார்ந்து கொண்டு வெறுமனே ஊடகங்களுக்கான அறிக்கைகளை மட்டும் வீராவேசங்களோடு விடுத்து வந்திருந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்வுகளையும், அழிவுகளையும், பேரவலங்களையும் மட்டுமே சந்தித்திருந்தனர்.

1977இல் தனிநாடு கேட்டு மக்கள் ஆணையை பெற்றவர்கள் எமது மக்களை அழியவிட்டு தமிழ்நாட்டில் பெற்றுக் கொண்டது தனிநாடு, ஆனாலும் எமது மக்களுக்குக் கிடைத்திருந்தது சுடுகாடு.

அன்றைய காலச் சூழலில் தாம் ஆயுதம் ஏந்திய நீதியான போராட்டத்தை நடத்தியிருந்தபோது தனிநாடு கேட்ட அவர்களே அந்த ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியிருந்தார்கள்.எமக்கு கிடைத்திருந்த பொன்னான வாய்ப்பான இலங்கை–இந்திய ஒப்பந்தத் தை முறைகேடாகவும், மக்களுக்கு விரோதமாகவும் நடத்தியிருந்தவர்களோடு கூட்டுச் சேர்ந்து இன்று மக்களின் உரிமை குறித்து பேசுவது வெறும் சந்தர்ப்பவாத அரசியலாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தவறான வழிமுறையிலாயினும் பெற்றுக் கொண்ட 22நாடாளுமன்ற உறுப்புரிமையினை ஒரு முடியாத தமிழ் ஆணையாக வைத்து தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வுகான முடியாத தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மாறாக தாம் பெற்ற நாடாளுமன்ற பலத்தை அழிவு யுத்தத்தைத் தூண்டிவிடுவதற்கும், அதற்கு நியாயம் கற்பிப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தியிருந்தவர்கள், தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் திருப்பத்தை ஏற்படுத்தும் தீர்மானத்தை எடுப்பது என்பது இதுவரை கால அழிவுகளுக்கும்,அவலங்களுக்கும் மட்டுமே தமது நாடாளுமன்ற பலத்தை துஷ்பிரயோகம் செய்திருந்த சுயலாப அரசியல் தலைமைகளை முற்றாக நிராகரித்து நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் எமது மக்களின் அரசியலுரிமைக்காக உழைத்துவரும் சக்திகளை ஆதரிப்பதாகும் என்றுள்ளது. (ச)

## தமிழ்க் கூட...

கூறப்பட்டது.

இலங்கையில் தமிழ் மக்களு க்கு எதிராக நடைபெறும் சம்பவங்களை உட னுக்குடன் இந்திய அரசுக்கு தெரியப்படுத்தும் நோக்குடனேயே இவ் அலுவலகம் திறக்கப் படவுள்ளது. (ச-5)

## ஜீ.எஸ்.பி. சலுகை நிறுத்தத்...

வரிச்சலுகை நிறுத்தப் படுவதனால் அத்துறையில் கடமை புரியும் ஊழியர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என எவரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அதற்கான முழுப் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்றபோது அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை தற்காலிகமாக நிறுத்தப்போவதாக ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளதையடுத்து அதனை ஒரு பெரும் பிரச்சினையாக உருவாக்க எதிர்க்கட்சிகள் முயன்று வருகின்றன.

அவர்கள் அச்சுறுத்துவது போல் அதில் இலங்கைக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லை. முதலீட்டாளர்களும் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள்.

இந்தப்பிரச்சினைய்ய தீர்த்து வைக்கும் முயற்சியாக ஐரோப்பிய யூனியனுடன் அரசாங்கம் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

அந்த வரிச்சலுகையை நாம் மீண்டும் பெற்றுக் கொள்வோம் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். (ச-5)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில்...

பல்வேறு துறைசார்ந்தவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கிடைத்துள்ளது.

இவ் விண்ணப்பங்கள்தொடர்பில்ஆராய்ந்து வேட்பாளர்களை களமிறக்கும் பணியில் கட்சியின் வேட்பாளர்களை நியமிக்கும் குழு ஈடுபட்டுள்ளது.

இதில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் களமிறக்க வுள்ள வேட் பாளர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இப் பணிகள் அடுத்த இரு தினங்களில் முடிபடைந்துவிடும். அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்தவர்களின் மனு ஆராயப்பட்டு வருகிறது.

எனினும் கொழும்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவது குறித்து எமது தோழமைக் கட்சியான மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுடன் விவாதித்து வருகின்றோம்.

இப்பேச்சு வார்த்தையின் பின்பே கொழும்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுமா? என்பது குறித்து முடிபெடுக்கப்படுமெனவும் அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார். (ச-5)

## தேர்தல் களத்...

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி முத்தையா முரளிதரன் உலக சாதனை படைத்துள்ளார்.

முத்தையா முரளீதரனை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இணைப்பதன்மூலம் தமிழ், சிங்கள இளைஞர்களின் வாக்குகளை கவர முடியும் என ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரிய ஆளும் கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

எனினும் முத்தையா முரளிதரன் இது குறித்து உத்தியோக பூர்வமாக தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. (ச-5)

## கொழும்பில் அரசியல் வியாபாரிகளை...

கொழும்பு மாவட்ட தமிழ் வேட்பாளர்களின் நியமனம் தொடர்பில் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவை தொடர்புகொண்டு மனோ கணேசன் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தலைநகர தமிழ் மக்களுக்கு கவசமாக எமது கட்சி இருந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்காக உயிரையும் துச்சமாக மதித்து வீதியில் இறங்கி போராடியவர்கள் நாங்கள். எங்கள் குரல் ஓங்கி ஒலித்து சர்வதேச சமூகத்தை தட்டி யெழுப்பியிருக்காவிட்டால் தலை நகரத்திலே நடந்திருந்த கடத்தல், காணாமல் போதல், வர்த்தக சமூகத்திடம் கப்பம் பெறல் மற்றும் படுகொலைகள் ஆகிய அநீதிகள் கட்டுப்பாட்டிற்கும், முடிவிற்கும் வந்திருக்காது.

இதனாலேயே எமக்கு இன்றைய அரசாங்கத்துடன் பாரிய முரண்பாடு ஏற்பட்டது. இன்று தனது பாதுகாப்பு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வேளையிலும் கூட, தனது தனிப்பட்ட பாதுகாப்பு பறிக்கப்பட்ட நிலைமையில் எமது தலைவர் மனோ கணேசன் இருக்கின்றார்.

எமது போராட்டங்களின் மூலமாக பெருவாரியான அரசியல் இலாபங்களை எதிர்க் கட்சிக் கூட்டணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் பெற்றுக்கொண்டுள்ளன. இது இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்பட்டது. இந்நிலையில் எமது மக்கள் துன்பமடையும் பொழுது எந்தவித எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் தமது சொந்த வியாபாரங்களை கவனித்துக்கொண்டிருந்த நபர்களை தமது நேரடி தமிழ் வேட்பாளர்கள் என பெயர் சூட்டி கொழும்பு மாவட்டத் தேர்தலில் நிறுத்த நினைப்பது எமது கட்சிக்கும், தலைநகர தமிழ்மக்களுக்கும் ஐக்கிய தேசியக்கட்சி செய்கின்ற துரோகமாகும்.

இத்தகைய துரோக முயற்சிகளை ஐக்கிய தேசியக்கட்சி தேர்தல் காலத்திலேயே செய்யுமானால் நாங்கள் மாற்று வழியை நாட வேண்டிவரும். ஐக்கியதேசியக்கட்சியில் உள்ள அனைத்து தமிழ் மக்களின் விரோதிகளையும் அம்பலப்படுத்தி நடுவீதிக்கு கொண்டுவர வேண்டிவரும்.

அது மட்டுமல்லாமல் நாடு முழுவதும் வாழும் அனைத்து தமிழ் வாக்காளர்களையும் அழைத்துக்கொண்டே நாங் கள் ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணி யிலிருந்து வெளியேறுவோம். இத்தகைய நிலைமை ஏற்படாமல் இருப்பதை தவிர்ப்பது என்பது, நாளை (இன்று) எமக்கிடையே நடை பெறும் இறுதிப் பேச்சுவார்த்தையில் தங்கியுள்ளது என்றுள்ளது. (ச-5)

## அமைச்சரவை...

ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்விரு அமைச்சர்களும் கலந்து கொண்டு அமைச்சரவைமுடிபுகள் பற்றி ஊடகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

அமைச்சரவை பேச்சாளராக கடமை யாற்றிய அமைச்சர் அனுர பிரியதர்சனயாப்பா கடந்த வாரம் அப் பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டதை அடுத்து இவ்விரு அமைச்சர்களும் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## அரசாங்கத்தின் அழுத்தத்தினா...

சுமங்கல தேரரைச் சந்தித்து அழுத்தம் தந்திருந்தனர். அரசாங்கத் திற்கு ஆதரவு தருகின்ற புத்த பிக்குகள் ஜனாதிபதியிடம் 3 மணி நேரத்திற்கும் அதிகமாகப் பேச்சு நடத்தியுள்ளனர். இந்த பிக்குகள் தலைமை பீடாதிபதியை மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாக்கியிருந்தனர் என்று பௌத்த பீடாதிபதிகளின் சார்பில் பேசிய அத் தங்கன்னே ரத்னபால தேரர் கூறினார்.

அரசாங்கத்தின் இந்த அழுத்தம் காரணமாக பௌத்த பீடாதிபதிகளின் மாநாடு வெறுமனே ஒத்திப்போடச் செய்யப்பட்டுள்ளதே ஒழிய மாநாடு ரத்து செய்யப்பட்டிருக்க வில்லை என்றும் அவர் தெளிவு படுத்தினார்.

இலங்கையின் முக்கிய புத்தமத பிரிவுகளின் தலைவர்களுக்கிடையில் நேற்று வியாழக்கிழமை இந்தக் கூட்டம் நடப்பதாக திட்டமிடப்பட்டிருந்தது.

இலங்கை அரசியலின் போக்குப் பற்றி விவாதிப்பதற்காக பௌத்த பீடாதிபதிகளின் மாநாட்டிற்கு முதலில் அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட விதத்தைக் கண்டித்தும் அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரியும் இப் பீடாதிபதிகள் பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றையும் எழுதியிருந்தனர்.

ஆனால் அரசியலில் புத்தபீடாதிபதிகள் தலையிடக் கூடாது என்று அரச ஊடகங்களில் கடுமையான விமர்சனங்கள் வெளியாகியிருந்ததன்பின்னர்,புத்தபீடாதிபதிகள் அழைப்புவிடுத்திருந்த இந்த கூட்டம் ஒத்தி போடப்பட்டுள்ளது. (ச-5)

## தமிழர்களுக்கு தனி மாநிலம்...

உரிமைகளையும் பெற்று வாழவழி செய்யும் வகையில் வடகிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு தனிமாநிலம் அமைத்திட இந்திய அரசு இலங்கைஅரசைநிர்ப்பந்திக்கவேண்டும்என்றும் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் அன்பரசு வலியுறுத்தினார். இன்றளவும் தமிழர்கள் இலங்கையில் பல அகதிகள் முகாம்களில் அடைக்கப்பட்டு வேதனையோடு வாழ்ந்து கொண்டு இரு க்கிறார்கள். அவர்களை அவரவர் ஊர்களில் குடியமர்த்த இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும். இலங்கை தமிழர்களின் உடனடி தேவை இதுதான். இதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறேன் என்று இரா.அன்பரசு வலியுறுத்தினார்.

இதற்கு அமைச்சரும் ஏற்கனவே இந்திய அரசு இலங்கை அரசை உரிய நடவடிக்கை எடுக்க வற்புறுத்தி இருக்கிறது. தொடர்ந்து இலங்கை அரசை வற்புறுத்தி நடவடிக்கை எடுக்க செய்கிறோம் என்று அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா உறுதியளித்தார். (ச-5)

## சரத் பொன்சேகா தலைமை...

ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தில் போட்டியிட தீர்மானித்ததை அடுத்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் காலத்தின் போது புதிய அரசியல் கட்சி ஒன்று பதிவு செய்ய முடியாது என்பதினால் ஏற்கனவே உள்ள கட்சி ஒன்றின் பெயரே புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்து பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஜே.வி.பி. அன்னச் சின்னத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளையும்ஒன்றிணைத்துபோட்டியிட விரும்பியது.

எனினும் இதனை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்க மறுத்து யானைச் சின்னத்திலேயே போட்டியிட தீர்மானித்தது.

அதற்கு ஆரம்பத்தில் எதிர்ப்புகள் ஏற்படினும் பின்னர் ஜனநாயக மக்கள் முன்னணியின் மனோ கணேசன் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர ஆகியோர் இணங்கினர்.

இதனை அடுத்தே ஜே.வி.பி. இந்த புதிய தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. (ச-5,9,14)


## UK கல்வி வாய்ப்பு

கொழும்பில் பிரபல்யமான நம்பிக்கையான, பல வருடகால அனுபவம் மிக்க நல்லதொரு செயற்திறன் கொண்ட GBS (Greenwich Business School) நிறுவனத்தினர் மாணவர்கள் நலன் கருதி யாழில் தனது கல்வி நிலையத்தை ஆரம்பித்துள்ளனர்.

அனைவரும் வருக நல்ல பயன் பெறுக.

**Greenwich Business School**

19,செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

077 3537378
021 3734747

(481)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.